بسم اللہ الرحمن الرحیم نحمدہ ونصلی علیٰ رسولہ الکریم وعلیٰ عبدہ المسیح الموعود
وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly **BADAR** Qadian TAMIL

தொகுதி 6

இதழ் 29

வருடாந்திர சந்தா ரூபாய் 575/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

11 துல் ஹஜ்ஜா 1442 ஹிஜ்ரி கமரி 22 வஃபா 1400 ஹிஜ்ரி ஷம்ஸி தப்லீக் 22 ஜூலை 2021

## அல்லாஹ்வின் கட்டளை

يٰۤاَيُّهَا الَّذِيۡنَ اٰمَنُوۡا لَا تَتَّخِذُوا الَّذِيۡنَ اتَّخَذُوۡا دِيۡنَكُمۡ هُزُوًا وَّلَعِبًا مِّنَ الَّذِيۡنَ اُوۡتُوا الۡكِتٰبَ مِنۡ قَبۡلِكُمۡ وَالۡكُفَّارَ اَوۡلِيَآءَ‌ ۚ وَاتَّقُوا اللّٰهَ اِنۡ كُنۡتُمۡ مُّؤۡمِنِيۡنَ

நம்பிக்கை கொண்டவர்களே! உங்களுக்கு முன்னர் வேதம் வழங்கப்பட்டவர்களுள் உங்கள் மார்க்கத்தை ஏளனமாகவும், விளையாட்டாகவும் ஆக்கிக் கொண்டவர்களையும், நிராகரிப்பவர்களையும் (உங்கள்) நன்பர்களாக ஆக்கிக் கொள்ளாதீர்கள். நீங்கள் நம்பிக்கை கொண்டவர்களாயின் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். (5:58)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

**அல்லாஹ் நபிமார்களிடம் இருந்த பல தரப்பட்ட சிறப்புகள் அனைத்தையும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் ஒன்றுகூட்டி விட்டான். பல தரப்பட்ட வேதங்களில் இருந்த அனைத்து சிறப்புகளையும் மேன்மைகளையும் இறைவன் திருக்குர்ஆனில் ஒன்றுகூட்டி விட்டான். பல்வேறு சமுதாயங்களிடத்தில் காணப்பட்ட சிறப்புகள் அனைத்தையும் அவன் இந்த சமுதாயத்தில் ஒன்றுகூட்டி விட்டான். நாம் அந்த சிறப்புகளை பெற வேண்டும் என இறைவன் விரும்புகின்றான்**

வாக்களிக்கப்பட்ட மஸீஹூம் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...

### ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வருகை மற்றும் திருக்குர்ஆன் இறங்கியதன் நோக்கம்

நபிமார்களை அனுப்புகின்ற அல்லாஹ் இறுதியில் (முழு) உலகத்தின் நேர்வழிக்காக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை அனுப்பினான். மேலும் திருக்குர்ஆனை அருளினான் என்றால் அதன் நோக்கம் என்னவாக இருந்தது? பணி செய்கின்ற ஒவ்வொருவருக்கும் ஏதாவதொரு நோக்கம் இருக்கும். திருக்குர்ஆனை இறக்கியதற்கும் அல்லது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை அனுப்பியதற்கும் அல்லாஹ்விற்கு எந்த நோக்கமும் இல்லை என்று எண்ணம் கொள்வது மிக மோசமான ஏளனம் மற்றும் அவமரியாதை ஆகும். ஏனென்றால் இதன் மூலம் அல்லாஹ்வின் பக்கம் ஒரு வீணான வேலையை சுட்டிக் காட்டப்படும். அல்லாஹ் நம்மை காப்பானாக. உண்மையில் அவன் தூயவனாவான். (سُبۡحَانَہٗ وَتَعَالٰی شَانُہٗ).

எனவே நினைவிற் கொள்ளுங்கள். மகத்துவமிக்க கருணையின் முன்னுதாரணம் உலகத்திற்கு வெளிப்பட வேண்டும் என்று கண்ணியத்திற்குரிய வேதத்தை அருளியதன் மூலமும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வருகையின் மூலமும் அல்லாஹ் நாடியுள்ளான். உதாரணமாக அவன் இவ்வாறு கூறியுள்ளான்.

مَاۤ اَرۡسَلۡنٰکَ اِلَّا رَحۡمَۃً لِّلۡعٰلَمِیۡنَ

அதேபோன்று திருக்குர்ஆனை அருளியதன் நோக்கமாக هُدًی لِّلۡمُتَّقِیۡنَ என்று கூறியுள்ளான். இது எப்படிப்பட்ட மகத்துவமிக்க நோக்கங்கள் என்றால் அதற்கு நிகர் கிடைக்க முடியாது. எனவே தான் அல்லாஹ் இதனை விரும்பியுள்ளான். நபிமார்களிடம் இருந்த பல வகையான சிறப்புகள் அனைத்தையும் அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் ஒன்றுகூட்டி விட்டான். பல தரப்பட்ட வேதங்களில் இருந்த அனைத்து சிறப்புகளையும் மேன்மைகளையும் இறைவன் திருக்குர்ஆனில் ஒன்றுகூட்டி விட்டான். சமுதாயங்களிடத்தில் காணப்பட்ட சிறப்புகள் அனைத்தையும் அவன் இந்த சமுதாயத்தில் ஒன்றுகூட்டி விட்டான். நாம் அந்த சிறப்புகளை பெற வேண்டும் என

*(தொடர்ச்சி 11 வது பக்கம்...)*

**பஹாயி கூட்டத்தினர் ஒவ்வொரு நாட்டிலும் சென்று தனியான சட்டத்தை உருவாக்கிக் கொள்கின்றனர். கிறிஸ்துவத்தின் நிலையும் இவ்வாறே உள்ளது. இதற்கெதிரில் இஸ்லாத்தின் அனைத்து போதனைகளும் ஒரு வேரில் நிலைபெற்றுள்ளது. அதனை குறைப்பதற்கும் அவசியமில்லை; கூட்டுவதற்கும் அவசியமில்லை. துவக்கம் முதலே இஸ்லாம் لَاۤ اِلٰہَ اِلَّا اللّٰہُ مُحَمَّدٌ رَّسُوۡلُ اللّٰہِ என்று கூறியுள்ளது. பின்னர் அதில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை.**

وَمَثَلُ كَلِمَةٍ خَبِيۡثَةٍ كَشَجَرَةٍ خَبِيۡثَةِ اۨجۡتُثَّتۡ مِنۡ فَوۡقِ الۡاَرۡضِ مَا لَهَا مِنۡ قَرَارٍ

(இப்ராஹீம் வசனம் 27)

இந்த வசனத்திற்கு ஸய்யிதுனா ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இவ்வாறு விளக்கம் அளிக்கின்றார்கள்:

شَجَرَۃٍ طَیِّبَۃٍ என்பதற்கு எதிரில் பொய் மார்க்கம் தொடர்பாக முன் வைக்கப்பட்டுள்ள விஷயங்கள் கீழ்க்கண்டவை ஆகும்:

(1) அதன் வடிவம் அறுவருக்கத்தக்கதாக இருக்கும்.

(2) உயர்தரமான மற்றும் குழப்பத்திற்குரிய போதனைகளை கலந்து முன் வைக்கப்படும்.

(3) உயர்தரமான முடிவுகள் வெளிப்படாது. அதாவது அந்த மார்க்கத்தின்படி நடந்து இறைவனை சென்றடைகின்ற எந்த மனிதரும் தோன்ற மாட்டார். உதாரணமாக, பஹாயி மார்க்கம் உள்ளது. அது வெளிப்பட்டு சுமார் 90 வருடங்கள் ஆகிவிட்டன. (அதாவது அதன் தோற்றுனரின் வாதத்திலிருந்து இந்த நேரம் வரை). ஆனால் அந்த போதனையின்படி நடந்து இறைவன் என்னுடன் பேசுகின்றான் என்று கூறக்கூடிய எந்த நபரும் தோன்றவில்லை. ஆனால் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தோன்றி இப்போது சிறிது காலமே ஆகியுள்ளது. அன்னாருடைய சீடர்களில் நூற்றுக்கணக்கான நபர்களை நாம் கூற முடியும். அவர்கள் இறைவனுடன் பேசுகின்றனர்.

“مَا لَهَا مِنۡ قَرَارٍ”

(1) அது எந்த நாட்டிலும் நிலைபெற முடியாது. அதாவது அதனை சோதனை செய்து உலகம் ஒரு முடிவிற்கு வருவதற்கு எந்த சந்தர்ப்பமும் வழங்கப்படாது. சோதனையின்றியே அது மரணித்து விடும்.

(2) அதனுடைய அடிப்படை சட்டங்களை மாற்றுவதற்கு அவசியம்

*(தொடர்ச்சி 11 வது பக்கம்...)*

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகத்துவமிக்க கலீஃபா ராஷித் ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்களின் புகழுக்குரிய பண்புகளைப் பற்றிய நற்குறிப்பு**

ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுஉல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 18 மே 2021** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1400 -ஆம் ஆண்டு **இஹ்ஸான்** மாதம் **18 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ-اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ-إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ-صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

اَلَّذِيْنَ يُنْفِقُوْنَ أَمْوَالَهُمْ بِاللَّيْلِ وَالنَّهَارِ سِرًّا وَّعَلَانِيَةً فَلَهُمْ أَجْرُهُمْ عِنْدَ رَبِّهِمْ وَلَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُوْنَ

இன்றைய நாட்களில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் நற்குறிப்பு சென்று கொண்டிருக்கிறது. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் வஃபாத் நேரம் நெருங்கியபோது அன்னார் ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்களை அழைத்து, எனக்கு உமரைப் பற்றி கூறுங்கள் என்று கூறினார்கள். எனவே ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்வின் தூதரின் கலீஃபா அவர்களே! அல்லாஹ்வின் மீது ஆணையாக! ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் இயல்பில் கடினம் மட்டும் உள்ளது. மற்றபடி அவர்கள் தாங்கள் கருதுவதை விடச் சிறந்தவர் ஆவார்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: அவர் என்னிடம் மென்மையைக் காண்பதால் தான், அவரிடம் கடினம் உள்ளது. அவரிடம் தலைமைப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டு விட்டால், அவர் தம்மிடமுள்ள பல விஷயங்களை விட்டு விடுவார். ஏனெனில் நான் அவரைக் கண்டுள்ளேன். நான் யார் மீதாவது கடுமை காட்டினால், அவர் என்னை அந்த நபர் மீது திருப்தி கொள்ள வைக்க முயற்சி செய்கிறார். நான் யார் மீதாவது மென்மை காட்டினால், மென்மையாக நடந்து கொண்டால் அவர் என்னை அந்த நபர் மீது கடுமை காட்டுமாறு கூறுகிறார்.

இதற்குப் பிறகு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உஸ்மான் பின் அஃப்பான் (ரலி) அவர்களை வரவழைத்து, ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களைப் பற்றி வினவினார்கள். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் கூறினார்கள்: அவர்களுடைய அகம் அவர்களுடைய புறத்தை விடச் சிறந்தது. எங்களில் அன்னாரைப் போன்றவர் யாருமில்லை. இதைக்கேட்ட ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இரண்டு சஹாபிகளிடமும் கூறினார்கள்: நான் உங்கள் இருவரிடமும் கூறிய விஷயங்களைப் பற்றி வேறு யாரிடமும் சொல்லக்கூடாது. நான் உமரை விட்டு விட்டால், உஸ்மானைத் தாண்டி செல்ல மாட்டேன். அதாவது, இருவரும் அன்னார் பார்வையில் கிலாஃபத்துக்கான உரிமையை அதிகமாக நிறைவேற்றக் கூடியவர்களாக இருந்தார்கள்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: அவருக்கு அதிகாரம் இருக்கும். அவர் உங்கள் விவகாரத்தில் எந்தக் குறைவும் வைக்க மாட்டார். இப்போது, நான் உங்களுடைய விவகாரங்களை விட்டு தனித்து விடவும் உங்கள் முன் சென்றோருடன் இணைந்து விடவும் விரும்புகிறேன்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் நோய்வாய்ப்பட்டிருந்த காலத்தில் ஹஸ்ரத் தல்ஹா பின் உபைதில்லாஹ் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் வந்து கூறினார்கள்: தாங்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை மக்களுக்கு கலீஃபாவாக ஆக்கி விட்டீர்கள். ஆனால் தாங்கள் இருக்கும்போது, அவர் மக்களுடன் எவ்வாறு நடந்து கொள்கிறார்கள் என்பதையும் தாங்கள் காண்கிறீர்கள். அவர்கள் தனித்து இருக்கும்போது நிலைமை என்னவாகும்? தாங்கள் தங்களது இறைவனைச் சந்திப்பீர்கள். தங்களிடம் குடிமக்கள் தொடர்பாகக் கேட்கப்படும்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், என்னை உட்கார வையுங்கள் என்று கூறினார்கள். கைதாங்கலாக உட்கார வைத்தார்கள். அவர்கள் அன்னாரைக் கைத்தாங்கலாக உட்கார வைத்தார்கள். அன்னார் கூறினார்கள்: நீங்கள் என்னை அல்லாஹ்வைப் பற்றி அச்சுறுத்துகிறீர்களா? நான் எனது இறைவனை சந்திக்கும்போது அவன் என்னிடம் கேட்டால், நான் உன்னுடைய அடியார்களில் சிறந்தவரை உன்னுடைய அடியார்களின் கலீஃபாவாக்கினேன் என்று பதிலளிப்போன்.

பிறகு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தாம் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தொடர்பாக உயிர் எழுதுவதற்காக ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களை தனிமையில் அழைத்தார்கள். பிறகு கூறினார்கள்: எழுதுங்கள்! بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ இது அபூபக்ர் பின் அபீ கஹாஃபா முஸ்லிம்களுக்கு எழுதுவது. இந்த அளவு கூறியப் பிறகு அன்னாருக்கு மயக்கம் வந்து விட்டது. ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் தம் தரப்பிலிருந்து, நான் உமர் பின் கத்தாப்பை உங்களுக்கு கலீஃபாவாக நியமித்துள்ளேன். நான் உங்களுக்கு நன்மையில் குறை வைக்கவில்லை என்று எழுதினார்கள். பிறகு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு நினைவு திரும்பியதும், என்ன எழுதியிருக்கின்றீர்கள்? எனக்குப் படித்துக் காட்டுங்கள் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் படித்துக் காட்டியதும், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், அல்லாஹு அக்பர் என்று கூறினார்கள். பிறகு கூறினார்கள்: நான் இந்த மயக்க நிலையிலேயே வஃபாத் ஆகிவிட்டால் மக்கள் மத்தியில் கருத்து வேறுபாடு ஏற்பட்டு விடக்கூடாதே! என்று நீர் அஞ்சி விட்டீர் என நான் நினைக்கிறேன். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் கூறினார்கள்: ஆம்! இது தான் விஷயம். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ் உமக்கு இஸ்லாம் மற்றும் முஸ்லிம்கள் தரப்பிலிருந்து வெகுமதி வழங்குவானாக.

(அல்காமில் ஃபித்தாரீக் லி இப்னு கஸீர் தொகுதி 2 பக்கம் 272, 273 – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அதாவது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கலீஃபா ஆவதாக ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் தம் தரப்பிலிருந்து எழுதிய வாக்கியத்தின் மீது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் எந்த ஆட்சேபனையையும் செய்யவில்லை.

தபரீ எனும் வரலாற்று நூலில் எழுதப்பட்டுள்ளது. முஹம்மத் பின் இப்ராஹீம் பின் ஹாரிஸ் அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களை தனிமையில் அழைத்துக் கூறினார்கள்: எழுதுவீராக! بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ இந்த உறுதி மடல் அபூபக்ர் பின் அபீ கஹாஃபா தரப்பிலிருந்து முஸ்லிம்களுக்காக எழுதப்படுகிறது. அறிவிப்பாளர் கூறுகிறார்: அதற்குப் பிறகு, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு மயக்கம் வந்து விட்டது. அன்னார் மயங்கி விட்டார்கள்.

O.A. NIJAM 99947 57172 V.A. SAIT 99430 30230

O.A.N. DOORS & STEELS



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals.

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram, (opp. Karuna Clinic) Tirunelveli - 627 005.

இதற்குப் பிறகு ஏற்கனவே கூறப்பட்டதற்கு ஏற்ப ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் சுய நினைவிற்கு வந்தார்கள். அதே விஷயங்கள் பேசப்பட்டன. நினைவு வந்த பிறகு, ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களை படித்துக் காட்டுமாறு கூறினார்கள். அதைக் கேட்ட பிறகு, எடுத்துரைக்கப்பட்டது போன்று, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், அல்லாஹு அக்பர் என்று கூறினார்கள். பிறகு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், நீர் இந்த வாசகத்தை எழுதியதால், அல்லாஹ் உமக்கு இஸ்லாம் மற்றும் முஸ்லிம்கள் தரப்பிலிருந்து வெகுமதி வழங்குவானாக என்று கூறினார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அந்த எழுதப்பட்டதை அவ்வாறே இருக்க விட்டார்கள். எந்த மாற்றமும் செய்யவில்லை.

(தாரீக் திப்ரி தொகுதி 2 பக்கம் 353, ஸிக்ர் இஸ்திக்லாஃப் உமர் பின் கத்தாப் – 1987 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஓர் அறிவிப்பில் உள்ளது. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களை வரவழைத்து, எனக்கு கலீஃபாவுக்காக யாரைக் குறித்தாவது ஆலோசனை கூறுங்கள். அல்லாஹ்வின் மீது ஆணையாக! நீர் எனது பார்வையில் ஆலோசனை வழங்கத் தகுதி பெற்றவர் ஆவீர் என்று கூறினார்கள்.

இதற்கு ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் என்று கூறினார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், எழுதுங்கள்! என்று கூறினார்கள். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் எழுதினார்கள். பெயர் எழுதும் வரை வந்ததும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மயங்கி விட்டார்கள். பிறகு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு நினைவு திரும்பியபோது, உமர் என்று எழுதுங்கள் என்று கூறினார்கள்.

ஓர் அறிவிப்பில் உள்ளது. ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் உயிலை ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் எழுதிக் கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு மயக்கம் வந்தது. ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் பெயரை எழுதி விட்டார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு நினைவு வந்ததும் அன்னார், நீர் என்ன எழுதினீர்? என்று கேட்டார்கள். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள், உமர் என்று நான் எழுதியுள்ளேன் என்று கூறினார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: நான் உம்மிடம் கூறுவேன் என்று நினைத்ததைத்தான் நீர் எழுதியுள்ளீர். நீர் உமது பெயரை எழுதியிருந்தாலும் நீரும் அதற்கு உரியவராகவே இருந்தீர்.

(இப்னு ஜூஸி அவர்கள் எழுதிய சீரத் உமர் பின் கத்தாப் என்ற நூல் பக்கம் 44,45 – மிஸ்ரில் அச்சிடப்பட்டது)

ஓர் அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் நோயுற்றபோது, அன்னார் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள், ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள், முஹாஜிர்கள் மற்றும் அன்ஸாரின் சில மக்களுக்கு தூதுச் செய்தி அனுப்பினார்கள். அதில் கூறினார்கள்: இப்பொழுது நேரம் வந்து விட்டதை நீங்கள் பார்க்கிறீர்கள். உங்களுக்கு ஆணையிடுவதற்கு யாரும் இருக்கவில்லை. நீங்கள் விரும்பினால், உங்களில் யாரையாவது தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள். நீங்கள் விரும்பினால் நான் உங்களுக்காகத் தேர்ந்தெடுக்கிறேன்.

அன்னார் கேட்டுக் கொண்டார். மாறாக, தாங்கள் எங்களுக்காகத் தேர்ந்தெடுத்து விடுங்கள். அன்னார் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களிடம் கூறினார்கள்: எழுதுவீராக! இந்த உறுதி மடல் அபூபக்ர் பின் அபீ கஹாஃபா இவ்வுலகை விட்டுச் செல்லும்போது, தான் செய்த கடைசி வாக்குறுதியாகும். மேலும் மறுமையில் நுழைந்தவாறு தான் செய்த முதல் வாக்குறுதி இதுவாகும். மேலும் அங்கு தீயவர் தவ்பா செய்வார். நிராகரிப்பாளர் நம்பிக்கை கொள்வார். பொய்யர் உண்மைப்படுத்துவார். மேலும் அந்த வாக்குறுதி இதுவாகும்:

அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் யாருமில்லை. மேலும் முஹம்மது (ஸல்) அவர்கள் அவனது அடியாரும் தூதரும் ஆவார்கள் என்று அவர்கள் சாட்சி பகர்கிறார்கள். நான் கலீஃபாவை நியமிக்கின்றேன்.

பிறகு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு மயக்கம் வந்து விட்டது. அப்போது ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் தாமாகவே, உமர் பின் கத்தாப் என்று எழுதிவிட்டார்கள். பிறகு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு நினைவு திரும்பியபோது, நீர் ஏதாவது எழுதினீரா? என அன்னார் கேட்டார்கள். அதற்கு ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள், ஆம்! நான் உமர் பின் கத்தாப் என்று எழுதியுள்ளேன் என்று கூறினார்கள். இதைக்கேட்ட ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ் உம்மீது கருணை காட்டுவானாக. நீர் உமது பெயரை எழுதியிருந்தாலும் நீரும் அதற்கு உரியவராகவே இருந்தீர். எனவே நான் எனக்குப் பிறகு ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்களை உங்களுக்கு கலீஃபாவாக நியமித்துள்ளேன். நான் உங்களுக்காக அவர் குறித்து திருப்தி கொள்கிறேன் என்று எழுதுவீராக.

(ஸஹீஹ் தாரிக் திப்ரி தொகுதி 3 பக்கம் 126, ஸிக்ர் இஸ்திக்லாஃப் உமர் பின் கத்தாப் – 2007 ஆம் ஆண்டு திமஷ்கிலுள்ள தார் இப்னு கஸீரில் அச்சிடப்பட்டது)

உயிர் எழுதப்பட்ட பிறகு, அதை மக்களுக்கு வாசித்துக் காட்டுங்கள் என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள். பிறகு ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் மக்களை ஒன்று திரட்டினார்கள். அவர்கள் தம்மால் விடுவிக்கப்பட்ட முன்னாள் அடிமையின் கையில் கடிதத்தை கொடுத்து அனுப்பினார்கள். அப்போது, ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களும் அந்த நபருடன் இருந்தார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மக்களிடம், அமைதியாக இருங்கள்! ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் கலீஃபாவின் பேச்சைக் கேளுங்கள். அவர்கள் உங்களுக்கு நன்மையை நாடுவதில் குறை வைக்கவில்லை என்று கூறினார்கள்.

அப்போது, மக்கள் அமைதியாக அமர்ந்து கொண்டார்கள். அவர்களுக்கு முன்னால் உயில் வாசிக்கப்பட்டது. அவர்கள் அதை செவியேற்றார்கள். கட்டுப்பட்டார்கள். அப்போது, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மக்கள் பால் திரும்பி, நான் உங்களுக்கு கலீஃபாவாக நியமித்தவர் மீது நீங்கள் திருப்பி கொள்கிறீர்களா? ஏனெனில் நான் எந்த உறவினரையும் உங்களுக்கு கலீஃபாவாக நியமிக்கவில்லை. நிச்சயமாக! நான் உமரை உங்களுக்கு கலீஃபாவாக நியமித்துள்ளேன். ஆக அவருக்கு செவிமடுங்கள். கட்டுப்படுங்கள். அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் இது தொடர்பாக ஆழ்ந்து சிந்திப்பதில் குறை வைக்கவில்லை என்று கூறினார்கள்.

இதைக் கேட்ட மக்கள், நாங்கள் செவியேற்றோம்; கட்டுப்பட்டோம் என்றனர். பிறகு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை அழைத்து அவர்களிடம், நான் உம்மை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் சஹாபிகளுக்கு கலீஃபாவாக நியமித்துள்ளேன் என்று கூறினார்கள். மேலும் அவர்களுக்கு, அதாவது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு இறையச்சத்தை மேற்கொள்ளுமாறு வலியுறுத்திக் கூறினார்கள்.

பிறகு கூறினார்கள்: உமரே! நிச்சயமாக அல்லாஹ்வுக்கு இரவில் செலுத்த வேண்டிய சில உரிமைகள் உள்ளன. அவற்றை அவன் பகலில் ஏற்றுக் கொள்வதில்லை. சில உரிமைகள் பகலில் செலுத்த வேண்டியவை. அவற்றை அவன் இரவில் ஏற்றுக் கொள்வதில்லை. நிச்சயமாக! ஃபர்ழ்கள் நிறைவேற்றப்படாத வரை அவன் நஃபில்களை ஏற்றுக் கொள்வதில்லை.

உமரே! நீர் பார்ப்பதில்லையா? உண்மையைப் பின்பற்றுவதாலும் அதிக எடை கொண்டிருப்பதாலும் எவர்களின் தராசு கியாமத் நாளன்று கனமாக இருக்குமோ அவர்களின் தராசே கனமானது. எவர்கள் உண்மையைப் பின்பற்றுவார்களோ அவர்களின் தராசு கியாமத் நாளன்று கனமாக இருக்கும்.

பிறகு அன்னார் கூறினார்கள்: தராசில் கனமான விஷயமே நாளை வைக்கப்படும் என்பது தராசுக்கு உரியதாகும். உமரே! நீர் பார்ப்பதில்லையா! எவர்களின் தராசு கியாமத் நாளன்று லேசாக இருக்குமோ அவர்களின் தராசே லேசானது. அவர்கள் பொய்யைப் பின்பற்றுவதன் காரணத்தாலும் அவர்கள் லேசாக இருந்ததன் காரணத்தாலும் (இவ்வாறு இருக்கும்). அதாவது அவர்கள் உண்மையைப் பின்பற்றி வரவில்லை. நன்மைகளை செய்து வரவில்லை. எனவே கியாமத் நாளன்று மீண்டும் அவர்களின் தராசுகள் லேசாக இருக்கும். மேலும் தராசில் பொய் வைக்கப்படும்போது அது லேசாவது என்பது தராசுக்கு உரியதாகும்.

உமரே! நீர் பார்ப்பதில்லையா? மென்மையான வசனங்கள கடினமான வசனங்களோடு இறங்கியுள்ளன. மேலும் கடினமான வசனங்கள்

மென்மையான வசனங்களோடு இறங்கியுள்ளன. நம்பிக்கையாளர்கள் ஆர்வங்கொள்ளக் கூடியவர்களாகவும், அஞ்சக் கூடியவர்களாகவும் இருக்க வேண்டும் என்பதற்காக இவ்வாறு இறங்கியுள்ளன. ஒரு புறம் நன்மை செய்ய ஆர்வம் கொள்ள வேண்டும். மறுபுறம் அவர்களுக்கு அல்லாஹ்வின் மீதான அச்சமும் இருக்க வேண்டும். அல்லாஹ்வோடு தொடர்பற்ற எந்த விஷயத்துக்கும் அவர்கள் ஆசை கொள்ளக் கூடாது. அவனது கைகளால் ஆன எந்த விஷயத்துக்கும் அவர்கள் அஞ்சக் கூடாது.

உமரே! நீர் பார்ப்பதில்லையா? அல்லாஹ் நரக வாசிகளைப் பற்றி அவர்களின் தீய செயல்கள் காரணமாக மட்டுமே கூறியுள்ளான். எனவே நீர் அவர்களைப் பற்றி கூறும்போது, நிச்சயமாக! நான் அவர்களைச் சார்ந்தவன் அல்ல என்று நம்புகிறேன் என்று கூறுவீராக. அல்லாஹ் சொர்க்கவாசிகளைப் பற்றி அவர்களின் நற்செயல்கள் காரணமாக மட்டுமே கூறியுள்ளான். ஏனெனில் அல்லாஹ் அவர்களின் தீமைகளை மன்னித்து விட்டான். எனவே நீர் அவர்களைப் பற்றி கூறும்போது, எனது செயல்கள் அவர்களின் செயல்களைப் போன்று உள்ளனவா? என்று உங்கள் உள்ளங்களிடம் கேளுங்கள்! என்று கூறுவீராக.

(அல்காமில் ஃபித்தாரீக் லி இப்னு கஸீர் தொகுதி 2 பக்கம் 273, 274 – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி)) அவர்களின் வஃபாத் நேரம் நெருங்கியபோது அன்னார் கூறினார்கள்: நம்மிடம் இருக்கும் முஸ்லிம்களின் செல்வங்களைத் திருப்பிக் கொடுத்து விடுங்கள். நான் அந்தச் செல்வத்திலிருந்து எதையும் எடுக்க விரும்பவில்லை. நான் பைத்துல் மாலில் இருந்து வாழ்வாதாரச் செலவுக்காக எடுத்த அந்த செல்வங்களுக்குப் பதிலாக இன்ன இன்ன இடத்தில் இருக்கும் எனது நிலங்கள் முஸ்லிம்களுக்கு கொடுக்கப்படுகின்றன.

இந்த நிலங்கள், பெண் ஒட்டகம், வாளை மெருகேற்றும் அடிமை மற்றும் ஐந்து திர்ஹம் பெறுமான போர்வை ஆகிய அனைத்தும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்குக் கொடுக்கப்பட்டு விட்டன. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இந்தப் பொருட்கள் அனைத்தையும் பார்த்தபோது, அன்னார் அதாவது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தமக்குப் பிறகு உள்ளவரை சிரமத்தில் ஆழ்த்தி விட்டார்கள் என்று கூறினார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா லி இப்னு சஅத் தொகுதி 3 பக்கம் 143 – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: ஒருவர் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம், அறிவீன காலத்தில் இருந்த அந்தக் கோபம் இப்போது உங்கள் இயல்பில் இல்லையா? என்று கேட்டார். அப்போது, ஹஸ்ரத் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், கோபமோ அதே தான் உள்ளது. ஆனால் இப்பொழுது நிராகரிப்பவர்களுக்கு எதிராக தென்படுகிறது என்று பதிலளித்தார்கள்.

(ஹகாயிகுல் ஃபுர்கான் தொகுதி 1 பக்கம் 206)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: மக்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம், தாங்கள் தங்களுக்குப் பிறகு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை கலீஃபாவாக நியமித்தால், மிகவும் சீற்றம் ஏற்படும். ஏனென்றால், அன்னார் மிகவும் கோபக்காரர் ஆவார்கள் என்று கூறினார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், நான் இருக்கும் வரையே அவரின் கோபம் அனலை வெளிப்படுத்துகிறது. நான் இல்லையென்றால், அவர் தாமாகவே மென்மையாகி விடுவார் என்று கூறினார்கள்.

(அன்வாரே கிலாஃபத், அன்வாருல் உலூம் தொகுதி 3 பக்கம் 151)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தொடர்பாக கூறுகிறார்கள்: ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கோபம் தொடர்பாக வருகிறது. ஒருவர் அன்னாரிடம், இஸ்லாத்திற்கு வருவதற்கு முன் தாங்கள் மிகப்பெரிய கோபக்காரராக இருந்தீர்களா? என்று கேட்டார்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: கோபமோ அதே தான். ஆனால் முன்னர் இடம் தெரியாமல் வந்து கொண்டிருந்தது. ஆனால் இப்போது சரியான இடத்தில் வருகிறது.

(அஹ்மதி வ கைர் அஹ்மதி மே கியா ஃபரக் ஹே?, ரூஹானீ கஸாயின் தொகுதி 20 பக்கம் 487)

கோபம் சரியான இடத்தில் பயன்படுகிறது.

ஜாமிஃ பின் ஷத்தாத் தமது ஒரு நெருங்கிய அன்பரிடமிருந்து அறிவிக்கிறார்கள்: நான் ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்கள் இவ்வாறு கூறக் கேட்டேன். இறைவா! நான் பலவீனமானவன். என்னை ஆற்றல் மிகுந்தவனாக்கி விடுவாயாக. நான் கடினமான இயல்புடையவன். என்னை மென்மையான இயல்புடையவனாக்கி விடுவாயாக. நான் கருமியாவேன். என்னை வள்ளலாக்கி விடுவாயாக.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கலீஃபா ஆனதுக்குப் பிறகு ஆற்றிய, முதல் சொற்பொழிவு தொடர்பாகவும் பல்வேறு அறிவிப்புகள் கிடைக்கப் பெறுகின்றன. ஓர் அறிவிப்பில் இவ்வாறு உள்ளது. ஹமீத் பின் ஹிலால் அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் வஃபாத்தின்போது இருந்த நபர் எங்களுக்கு கூறினார்:

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை நல்லடக்கம் செய்த பிறகு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தமது கைகளிலிருந்து அன்னாரின் கப்ருடைய மண்ணை உதரினார்கள். பிறகு தமது இடத்தில் நின்று இவ்வாறு கூறினார்கள்: நிச்சயமாக! அல்லாஹ் உங்களை என் மூலமாகவும், என்னை உங்கள மூலமாகவும் சோதிதுள்ளான். அவன் எனது இரு தோழர்களுக்கும் பிறகு என்னை உங்களில் எஞ்சியிருக்க வைத்துள்ளான். அல்லாஹ்வின் மீது ஆணையாக! உங்களுடைய எந்த விவகாரம் என் முன் வைக்கப்பட்டாலும் சரி! என்னைத் தவிர வேறு யாரும் அதைப் பார்க்க மாட்டார்கள். என்னை விட்டுத் தொலைவில் இருக்கும் விவகாரத்துக்கு நான் வலுவான மற்றும் நம்பகமான மக்களை நியமிப்பேன். (அதாவது உங்களைக் கண்காணிக்கக்கூடிய, விவகாரங்களைப் பார்க்கக்கூடிய மக்கள் நியமிக்கப்படுவார்கள்). மக்கள் நன்றாக நடந்து கொண்டால், நானும் அவர்களுடன் நன்றாக நடந்து கொள்வேன். அவர்கள் தீமை செய்தால் நான் அவர்களுக்குத் தண்டனையளிப்பேன்.

ஹஸன் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் முதன் முதலில் ஆற்றிய சொற்பொழிவு இதுவாகும் என்று நாங்கள் கருதுகிறோம். அன்னார் அல்லாஹ்வின் புகழையும் தூய்மையையும் எடுத்துரைத்தார்கள். பிறகு கூறினார்கள்:

நான் உங்கள் மூலம் சோதிக்கப்பட்டுள்ளேன். மேலும் நீங்கள் என் மூலம் சோதிக்கப்பட்டுள்ளீர்கள். என்னை எனது இரண்டு தோழர்களுக்குப் பிறகு உங்கள் மத்தியில் பின்விடப்பட்டு விட்டது. ஆக எனக்கு முன் இருக்க்கும் விவகாரத்தை யாமே பார்ப்போம். மேலும் எம்மை விடுத் தொலைவில் இருக்கும் விவகாரத்துக்கு நாம் வலிமையான, நம்பிக்கையான மக்களை நியமிப்போம். எவர் நன்மை செய்வாரோ அவருக்கு நாம் மிகுதியான நன்மை செய்வோம். எவர் தீமை செய்வாரோ அவருக்கு நாம் தண்டனை அளிப்போம். அல்லாஹ் என்னையும் உங்களையும் மன்னிப்பானாக.

ஜாமிஃ பின் ஷத்தாத் தமது தந்தையிடமிருந்து அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் சொற்பொழிவு மேடை மீது ஏறியதும் அன்னாருடைய முதல் கூற்று இதுவாக இருந்தது. அன்னார் கூறினார்கள்:

اَللّٰھُمَّ اِنِّیْ شَدِیْدٌ فَلَیِّنِیْ وَاِنِّیْ ضَعِیْفٌ
فَقَوِّنِیْ وَاِنِّیْ بَخِیْلٌ فَسَخِّنِیْ

அல்லாஹ்வே! நான் கடினமானவன். நீ என்னை மென்மையாக்கி விடுவாயாக! நான் பலவீனமானவன். நீ என்னை ஆற்றல் மிகுந்தவனாக்கி விடுவாயாக! நான் கருமியாவேன். நீ என்னை வள்ளலக்கி விடுவாயாக.

(அத்தப்காத்துல் குப்ரா லி இப்னு சஅத் தொகுதி 3 பக்கம் 208, ஸிக்ர் இஸ்திக்லாஃப் உமர் – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஜாமிஃ பின் ஷத்தாத் தமது தந்தையிடமிருந்து அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கலீஃபாவாகத் தேர்வானபோது, அன்னார் சொற்பொழிவு மேடை மீது ஏறினார்கள். மேலும், நான் சில சொற்களை கூறவிருக்கின்றேன். நீங்கள் அதற்கு ஆமீன் என்று சொல்லுங்கள் என்று கூறினார்கள். இது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கலீஃபா ஆன பிறகு ஆற்றிய முதல் சொற்பொழிவாகும்.

ஹுஸைன் மூரீ அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: அரபு நாட்டு மக்களின் உதாரணம் கடிவாளம் இடப்பட்ட

ஒட்டகத்தைப் போன்றது. அது தன்னை மேய்ப்பவருக்குப் பின்னால் செல்கிறது. ஆக அதை மேய்ப்பவர் எவ்வாறு மேய்க்கிறார் என்பதைப் பார்க்க வேண்டும். என்னைப் பொருத்தவரை கஅபாவின் இறைவன் மீது ஆணையாக! நான் நிச்சயமாக அவர்களை நேர்வழியில் வைப்பேன்.

(தாரீக் திப்ரி தொகுதி 2 பக்கம் 355 – 1987 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

முதலில் வந்த, ஆமீன் சொல்லுங்கள் என்ற அறிவிப்பின் விளக்கம் வரவில்லை. அல்லது கடிவாளம் பற்றிய இந்த அறிவிப்பு தான் விளக்கம்.

எவ்வாறிருப்பினும், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கலீஃபாவாகத் தேர்வானதற்கு மூன்றாவது நாள் ஒரு விளக்கமான சொற்பொழிவு ஆற்றினார்கள். அது இதுவாகும்: ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு மக்கள் அன்னாரைக் குறித்து அஞ்சுவதாக தகவல் கிடைத்தது. அப்போது, அன்னாருடைய ஆணைப்படி மக்கள் மத்தியில், الصلوٰةُ جَامِعَةٌ அதாவது தொழுகை ஆயத்தமாக உள்ளது என்று உரத்த குரலில் முழுக்கமிடப்பட்டது. இதைக் கேட்டு மக்கள் ஒன்றுகூடி விட்டனர்.

அன்னார் சொற்பொழிவு மேடையில், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தமது பாதங்களை வைத்து வந்த அந்த இடத்தில் அமர்ந்தார்கள். முழுமையாக கூட்டம் கூடிய பிறகு அதாவது மக்கள் ஒன்று கூடிய பிறகு அன்னார் நேராக எழுந்து நின்றார்கள். பிறகு அல்லாஹ்வைப் புகழ்வதற்குப் பொருத்தமான சொற்களால் அல்லாஹ்வைப் புகழ்ந்து அவனது தூய்மையை எடுத்துரைத்தார்கள். பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது ஸலவாத் ஓதினார்கள்.

பிறகு கூறினார்கள்: எனக்கு இவ்வாறு தகவல் கிடைத்துள்ளது. மக்கள் என்னுடைய கோபமான இயல்பால் அஞ்சுகிறார்கள். மேலும் எனது ஆவேசமான இயல்பால் அச்சமடைந்துள்ளார்கள். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நமக்கு மத்தியில் இருந்த காலத்தில் உமர் எங்கள் மீது கடினம் காட்டினார். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் எங்களுடைய ஆட்சியாளராக இருந்தபோதும் எங்கள் மீது கடினம் காட்டினார். இப்பொழுது ஆட்சி அதிகாரம் முழுவதுமாக அவர் கையில் சென்று விட்ட என்னவாகுமோ? என்று கூறுகிறார்கள்.

இதைக் கூறியவர் உண்மையைக் கூறினார். ஐயமின்றி நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் இருந்தேன். அன்னாருடைய அடியானாகவும் தொண்டனாகவும் இருந்தேன். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எத்தகைய மனிதராக இருந்தார்கள் என்றால், எவரும் அன்னாருடைய மென்மை மற்றும் கருணையுள்ளம் எனும் பண்பு வரைச் சென்றடைய முடியாமல் இருந்தது. அல்லாஹ் அன்னாருக்கு அதை அருளியிருந்தான். அன்னாருக்குத் தனது பெயர்களில் இரண்டு பெயர்களான ரவூஃப் மற்றும் ரஹீம் என்பதை வழங்கியிருந்தான். நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நாடினால் என்னை உறையிலிட்டுக் கொள்ளும் வகையிலும், அல்லது என்னை விட்டு விட்டால் நான் வெட்டி வீழ்த்தும் வகையிலும் உறுவப்பட்ட ஒரு வாளாக இருந்தேன். எதுவரையெனில், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வஃபாத் ஆகிவிட்டார்கள். அன்னார் என்மீது திருப்தி கொண்டிருந்தார்கள். நான் இந்த அடிப்படையில் நற்பாக்கியம் பெற்றவனாக இருந்தேன் என்பதற்கு அல்லாஹ்வுக்கு நன்றி!

பிறகு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மக்களின் ஆட்சியாளர் ஆனார்கள். அன்னார் எத்தகைய மக்களைச் சேர்ந்தவர்களாக இருந்தார்கள் என்றால், உங்களில் எவரும் அன்னாருடைய மென்மையான இதயம், கருணை மற்றும் மெல்லிய இயல்பை நிராகரிக்கக்கூடியவர் இல்லை. நான் அன்னாரின் தொண்டனாகவும், உதவியாளனாகவும் இருந்தேன். எனது கடினத்தை அன்னாரின் மென்மையுடன் கலந்து விடுவேன். ஏந்திய வாளாக ஆகி விடுவேன். அன்னாரின் கையில் இருந்து வந்தேன். அவர்கள் நாடினால் என்னை உறையில் போட்டு பூட்டி விடலாம் அல்லது விரும்பினால் என்னை விட்டு விடலாம்; நான் வெட்டி வீழ்த்துவேன் என்ற நிலை இருந்தது. ஆக அன்னார் என் மீது திருப்தி கொண்டிருந்த நிலையில் கண்ணியத்திற்குரிய அல்லாஹ் அன்னாருக்கு மரணத்தை தரும் வரையில் நான் இவ்வாறே அன்னாரோடு இருந்தேன். அல்ஹம்துலில்லாஹ். நான் இந்த வகையில் நற்பாக்கியம் பெற்றவனாக இருந்தேன்.

பிறகு மக்களே! நான் உங்களது விவகாரங்களுக்கு ஆட்சியாளன் ஆகிவிட்டேன். இப்போது அந்தக் கோபம் பலவீனப்படுத்தப்பட்டு விட்டதாகப் புரிந்து கொள்ளுங்கள். ஆனால் அது முஸ்லிம்கள் மீது அநீதியிழைப்பவர்கள் மீதும் கையோங்குபவர்கள் மீதும் வெளிப்படும். உங்கள் மீது பலவீனமாக உள்ளது. ஆனால் கோபம் எதிரிகள் மீது வெளிப்படும். மற்றபடி, நல்லியல்புடைய, நேர்மையான மற்றும் சிறப்புடைய மக்களைப் பொறுத்த வரையில் நான் அவர்கள் ஒருவர் மற்றவர் மீது காட்டுவதைக் காட்டிலும் அதிகமாக அவர்களுடன் மென்மைக் காட்டுபவனாகத் திகழ்வேன். ஒருவர் யார் மீதாவது அநீதியிழைக்கவோ, கையோங்கவோ நான் கண்டால் அவர் உண்மையை நன்றாக புரிந்து கொள்ளும் வரை அவரது கன்னத்தை நிலத்தில் கிடத்தி எனது பாதத்தை அவரது இன்னொரு கன்னத்தின் மீது வைப்பேன். அதாவது, அதிகமாக கடினம் காட்டுவேன். மக்களே! என் மீது உங்களுக்கு செலுத்த வேண்டிய உரிமைகள் நிறைய உள்ளன. அதை நான் உங்களுக்குக் கூறுகிறேன். அவற்றிற்காக நீங்கள் என்னைப் பிடிக்கலாம். நான் உங்களுக்கு செலுத்த வேண்டிய உரிமையாவது, நான் உங்களுக்கு செலவு செய்ய வேண்டிய செல்வங்களிலிருந்தும் அல்லாஹ் போர்ச் செல்வமாக உங்களுக்காக அனுப்பிய செல்வத்திலிருந்தும் அல்லாஹ்வின் பணிகளுக்காகத் தடுத்துவைத்திருப்பவற்றைத் தவிர வேறு எதையும் உங்களிடமிருந்து மறைத்து வைக்கக்கூடாது. நான் உங்களுக்கு செலுத்த வேண்டிய உரிமையாவது, அந்தச் செல்வம் அதற்குரிய இடத்தில் செலவு செய்யப்பட வேண்டும்.

நான் உங்களுக்கு செலுத்த வேண்டிய உரிமையாவது, நான் உங்களுக்கான ஒய்வூதியங்களையும், உதவித் தொகைகளையும் தினக்கூலிகளையும் உங்களுக்குக் கொடுத்து வர வேண்டும். நான் உங்களுக்கு செலுத்த வேண்டிய இந்த உரிமையும் உள்ளது. அதாவது நான் உங்களை அழிவின் இடங்களில் கிடத்தக்கூடாது. நீங்கள் போர்ப்படையில் கலந்து கொண்டு வீட்டில் இல்லாதபோது, நீங்கள் உங்கள் மனைவி மக்களிடம் திரும்பி வரும் வரை நான் அவர்களுக்குத் தந்தையாக இருக்க வேண்டும். நான் எனது இந்த விஷயத்தைக் கூறுகிறேன். மேலும் எனக்காகவும் உங்களுக்காகவும் அல்லாஹ்விடம் பாவமன்னிப்புக் கோருகிறேன்.

(இஸாலத்துல் கஃபா அன் கிலாஃபத்துல் குலஃபா – தொகுதி 3 பக்கம் 226–228 – கராசிச்யிலுள்ள கதீம் குதுப் கானாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலத்தைப் பற்றிக் குறிப்பிட்டவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: எந்நேரமும் முஸ்லிம்களின் கண்களுக்கு முன்னால் இந்த வசனம் இருந்தது.

تُؤَدُّوا الۡاَمٰنٰتِ اِلٰۤی اَهۡلِهَا

அதாவது எவர்கள் ஆளுமைக்குத் தகுதி பெற்றவர்களோ, எவர்கள் நிர்வாக விஷயங்களைத் தாங்கிப்பிடிக்கும் தகுதியைத் தம்முள் கொண்டுள்ளார்களோ அவர்களிடம் இந்த அமானிதங்களை ஒப்படையுங்கள். பிறகு இந்த அமானிதங்கள் கண்முன் இருந்து வந்தன. அதாவது, நேர்மையுடனும் நீதியுடனும் ஆட்சி செய்யுங்கள். நீங்கள் நீதியைக் கண்டும் காணாமல் விட்டு விட்டால், நீங்கள் நேர்மையைக் கருத்திற் கொள்ளவில்லையாயின் நீங்கள் இந்த அமானிதத்தில் நம்பிக்கை துரோகத்துடன் செயல்பட்டால், இறைவன் உங்களோடு கணக்குத் தீர்ப்பான். அவன் உங்களுக்கு இந்தக் குற்றத்திற்குத் தண்டனையளிப்பான்.

**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர்.
(முஸ்லிம்)

S.S.H.Muhammed Lebbai (Sec.Taleem, Melapalayam)

இந்த விஷயத்துக்கான தாக்கமே ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் இயல்பின் மீது எந்த அளவு அதிகமாக இருந்ததென்றால், அதைப்பார்த்து மனிதனுக்குப் புல்லரித்துப் போகும்.

இஸ்லாத்தின் இரண்டாவது கலீஃபாவாகத் திகழ்ந்த ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இஸ்லாம் மற்றும் முஸ்லிம்களின் முன்னேற்றத்திற்காக எந்த அளவு தியாகங்களை செய்துள்ளார்கள் என்றால், ஹஸ்ரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது அல்லும் பகலும் ஆட்சேபனைகள் செய்து வரும் அந்த ஐரோப்பிய எழுத்தார்கள்; ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தொடர்பாக தமது நூல்களில் (நஊதுபில்லாஹ்) அன்னார் நேர்மையாக நடந்து கொள்ளவில்லை என்று மிகவும் வெட்கமில்லாமல் எழுதக்கூடிய அந்த எழுத்தாளர்களாலும் கூட, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களைப் பற்றி குறிப்பிடுகையில், எந்த அளவு கடின உழைப்போடும், தியாகத்தோடும் இம்மக்கள் பணியாற்றினார்களோ, இத்தகைய கடின உழைப்பு மற்றும் தியாகத்துக்கான உதாரணம் உலகின் எந்த ஆட்சியாளரிடமும் தென்படுவதில்லை என்பதை ஒப்புக் கொள்ள முடியாமல் இருக்க முடியவில்லை.

குறிப்பாக ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் பணிகளை அந்த எழுத்தாளர்கள் அளவற்ற முறையில் புகழ்கின்றார்கள். மேலும் இந்த நபர் இரவும் பகலும் முழு ஈடுபாட்டுடன் இஸ்லாத்தின் சட்டங்களை வெளியிடுவதற்கான மற்றும் முஸ்லிம்களின் முன்னேற்றத்திற்கான கடமைகளை நிறைவேற்றினார் என்று கூறுகிறார்கள்.

ஆனால் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் சொந்த நிலை என்னவாக இருந்தது. ஆயிரக்கணக்கான பணிகளை ஆற்றிய பொழுதிலும் ஆயிரக்கணக்கான தியாங்கள் செய்த பொழுதிலும் ஆயிரக்கணக்கான கஷ்டங்களை சகித்துக் கொண்ட பொழுதிலும் அவர்களின் கண்முன் இந்த வசனம் இருந்து வந்தது:

إِنَّ اللّٰهَ يَأْمُرُكُمْ أَنْ تُؤَدُّوا الْأَمٰنٰتِ إِلٰى أَهْلِهَا

மேலும் இந்த வசனமும் இருந்து வந்தது:

وَإِذَا حَكَمْتُمْ بَيْنَ النَّاسِ أَنْ تَحْكُمُوْا بِالْعَدْلِ

அதாவது நீங்கள் அல்லாஹ்வின் தரப்பிலிருந்து ஏதேனும் பணியில் நியமிக்கப்பட்டால், உமது நாட்டு மக்கள் மற்றும் உங்களது சகோதரர்களே ஆளுமைக்காக உங்களைத் தேர்ந்தெடுத்தால் நீங்கள் நீதியோடு நடந்து கொள்வதும், உங்களது அனைத்து ஆற்றல்களையும் மனித குலத்தின் வெற்றிக்காகவும் நலனுக்காகவும் செலவு செய்து விடுவதும் உங்கள் கடமையாகும். ஆக ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் பின்வரும் சம்பவம் எந்த அளவு வேதனைமிக்கதாக இருக்கிறது.

வஃபாத்திற்கு அருகில், அன்னாரை அநீதிழைப்பவர் எனக் கருதி, ஒருவன் முட்டாள்தனத்தினாலும் அறியாமையின் காரணமாகவும் அன்னாரைக் கத்தியால் குத்திவிட்டபோது, அன்னாருக்குத் தமது மரணத்தைப் பற்றி உறுதியாகத் தெரிந்துவிட்ட பிறகு, அன்னார் படுக்கையில் மிகவும் வேதனையோடு துடித்துக் கொண்டிருந்தார்கள். மீண்டும் மீண்டும் இவ்வாறு கூறிக் கொண்டிருந்தார்கள்:

اَللّٰهُمَّ لَا عَلَيَّ وَلَا لِيْ- اَللّٰهُمَّ لَا عَلَيَّ وَلَا لِيْ

இறைவா! நீ என்னை இந்த ஆட்சியில் அமர வைத்தாய். ஓர் அமானிதத்தை நீ என்னிடம் ஒப்படைத்தாய். நான் அந்த ஆட்சிக்கான உரிமையை செலுத்தி விட்டேனா? இல்லையா? என்பது எனக்குத் தெரியாது. இப்போது என்னுடைய மரணத் தருவாய் அருகில் உள்ளது. நான் உலகை விட்டு விட்டு உன்னிடம் வர இருக்கிறேன். இறைவா! நான் எனது நற்செயல்களுக்கு நற்கூலியாக எந்தவொரு வெகுமதியையும் உன்னிடம் வேண்டவில்லை. எந்தவொரு பரிசுக்கும் ஆசைப்படவில்லை. மாறாக, என் இறைவா! நான் இந்த விஷயத்தை மட்டும் தான் வேண்டுகிறேன். நீ என் மீது கருணை புரிந்து என்னை மன்னித்து விடுவாயாக. இந்தப் பொறுப்பை நிறைவேற்றுவதில் என்னிடம் ஏதாவது பிழை ஏற்பட்டிருந்தால், அதை மன்னிப்பாயாக.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் எத்தகைய மேன்மை மிக்க மனிதராக இருந்தார்கள் என்றால், அவர்களின் நீதி நியாயத்துக்கு உதாரணம் உலகில் மிகக் குறைவாகவே தென்படுகிறது. ஆனால் وَإِذَا حَكَمْتُمْ بَيْنَ النَّاسِ أَنْ تَحْكُمُوْا بِالْعَدْلِ என்ற கட்டளையின்கீழ், அவர்கள் மரணிக்கும்போது எந்த அளவு அமைதியின்மை மற்றும் நிம்மதியிழந்த நிலையில் வஃபாத்தானார்கள் என்றால் அவர்கள் நாட்டின் நற்பயனுக்காக செய்த அந்த அனைத்து தொண்டுகளும், அவர்கள் மக்களின் மேம்பாட்டுக்காக செய்த அந்த அனைத்து தொண்டுகளும் இஸ்லாத்தின் முன்னேற்றத்திற்காக செய்த அந்த அனைத்துத் தொண்டுகளும் அவர்களுக்கு முற்றிலும் அற்பமானவையாகத் தென்பட்டன.

அந்த நாட்டின் அனைத்து முஸ்லிம்களுக்கும் நல்லவையாகத் தென்பட்ட அந்த அனைத்துத் தொண்டுகளும் அந்த நாட்டின் மாற்று சமுதாயத்தாருக்கும் நல்லவையாகத் தென்பட்ட அந்த அனைத்துத் தொண்டுகளும் அவர்களின் நாட்டின் தம்மவர்கள் மற்றும் அந்நியர்களுக்கு மட்டுமல்லாமல், பிற நாட்டினருக்கும் நல்லவையாகத் தென்பட்ட அந்த அனைத்துத் தொண்டுகளும் அவர்களது சமகாலத்து மக்களுக்கு மட்டுமே நல்லவையாகத் தென்படாமல், மாறாக இன்று 1300 ஆண்டுகள் கழிந்த பிறகும் கூட, எந்த மக்கள் அவர்களுடைய எஜமானர் (ஸல்) அவர்களைத் தாக்குவதிலிருந்து தவிர்ந்திருப்பதில்லையோ அந்த மக்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களைப் பற்றி குறிப்பிடும்போது, சந்தேகமின்றி உமர் தமது அரும்பணிகளில் ஒரு தன்னிகரில்லாத மனிதராக இருந்தார் என்று கூறுகிறார்கள்.

அந்த அனைத்துத் தொண்டுகளும் சுயமே ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் பார்வையிலும் முற்றிலும் அற்பமானவையாகி விடுகின்றன. மேலும் அவர்கள் துடிதுடித்தவாறு கூறுகிறார்கள்:

اَللّٰهُمَّ لَا عَلَيَّ وَلَا لِيْ

அதாவது ஓர் அமானிதம் என்னிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. நான் அதன் உரிமைகளை நிறைவேற்றியும் உள்ளேனா? இல்லையா என்பது எனக்குத் தெரியாது. எனவே நான் உன்னிடம் இந்த அளவு மட்டுமே கேட்டுக் கொள்கிறேன். நீ எனது பிழைகளை மன்னித்தருள்வாயாக! என்னைத் தண்டனையிலிருந்து பாதுகாத்து வைப்பாயாக!

(இஸ்லாம் கா இக்திஸாதி நிஸாம், அன்வாருல் உலூம் தொகுதி 18 பக்கம் 11–13)

பிறகு தூன்யா கா முஹ்ஸின் (உலகின் மீது பேருபகாரம் புரிந்தவர்) என்ற தமது ஒரு சொற்பொழிவில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள். இது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பற்றிய சொற்பொழிவு. இதில் கூறுகிறார்கள்:

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் எத்தகைய மனிதராக இருந்தார்கள் என்றால், அவர்கள் தொடர்பாக கிறிஸ்துவ வரலாற்றாசிரியர்கள் கூட, அவர் உலகில் யாரும் செய்திராத அளவு ஆட்சி செய்திருக்கிறார் என்று எழுதுகிறார்கள். அந்த மக்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை ஏசுகிறார்கள். ஆனால் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களைப் புகழ்கிறார்கள். எந்நேரமும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் இருந்த அந்த மனிதர் மரணிக்கும்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலடியில் தமக்கு இடம் கிடைத்து விட வேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஏதேனும் ஒரு செயல் மூலம், அன்னார் இறைவனின் தன்னிறைவைப் பெறுவதற்காக செயலாற்றவில்லை என்பது வெளிப்பட்டிருந்தால், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களைப் போன்ற மனிதர் அந்த அந்தஸ்தை அடைந்த பிறகு அன்னாருடைய காலடிகளில் இடம் கிடைத்து விட வேண்டும் என்று ஒருபோதும் ஆசை கொண்டிருக்க மாட்டார்கள்.

(துன்யா கா முஹ்ஸின், அன்வாருல் உலூம் தொகுதி 10 பக்கம் 262)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அடிமையாக இருந்ததன் காரணமாக அன்னாருடைய தர்பிய்யத்தின் காரணமாக ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் இந்த நீதியான செயல்கள் இருந்தன; இந்த இறையச்சம் இருந்தது என்பதை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் நிரூபிக்கிறார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் குடும்பத்தினரோடு பற்றுறுதியின் வெளிப்பாடு எவ்வாறிருந்தது என்பது தொடர்பாக ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிறகு, நீண்ட காலம் வரை ஹஸ்ரத்

ஆயிஷா (ரலி) அவர்கள் உயிருடன் இருந்தார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் காலத்தில் ஈரான் வெற்றி கொள்ளப்பட்டபோது, அங்கிருந்து மாவு அரைக்கும் ஆட்டுரல்கள் கொண்டு வரப்பட்டன. அவற்றில் மாவு மிகவும் மென்மையாக அரைந்தது. முதன் முதலில் அந்த ஆட்டுரல் மதீனாவில் அமைக்கப்பட்டபோது, ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் முதலில் அரைக்கப்பட்ட மென்மையான மாவை ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களுக்கு அன்பளிப்பாக அனுப்புமாறு ஆணையிட்டார்கள்.

ஆக அன்னாரின் உத்தரவுப்படி அந்த மென்மையான மைதா ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அவர்களின் பணிப்பெண் அந்த மாவால் மெல்லிய மிருதுவான சப்பாத்திகளை தயார் செய்தார். இத்தகைய மாவை இதற்கு முன்னர் பார்த்திராத மதீனத்து பெண்கள் பெருங்கூட்டமாக, வாருங்கள், அந்த மாவு எப்படி இருக்கிறது? அதன் மூலம் செய்யப்படும் சப்பாத்தி எப்படி வருகிறது என்று பார்ப்போம் என்று ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் வீட்டில் ஒன்றுகூடி விட்டார்கள். திண்ணை முழுவதும் பெண்களால் நிறைந்திருந்தது. எல்லாரும் அந்த மாவால் சப்பாத்தி தயார் ஆகட்டும் அதைப் பார்ப்போம் என்று காத்துக் கொண்டிருந்தனர்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் பெண்களை நோக்கி உரையாற்றிக் கொண்டிருந்தார்கள். அவர்களைப் பார்த்து கூறுகிறார்கள்:

அது ஏதோ விநோதமான வகை மாவாக இருந்திருக்கும் போல என நீங்கள் நினைத்துக் கொண்டிருப்பீர்கள். அது விநோதமான மாவு கிடையாது. மாறாக அது நீங்கள் அன்றாடம் உண்ணும் அந்த மாவைக் காட்டிலும் சாதாரண மாவு தான். இன்னும் சொல்வதென்றால், இன்று உங்களில் ஏழைகளிலும் ஏழைப் பெண் உண்ணும் மாவைக்காட்டிலும் தரம் குறைந்த மாவாகவே அது இருந்தது. ஆனால் மதீனாவில் எந்த வகையான மாவுகள் இருந்து வந்தனவோ அவற்றை விட அது மிகவும் உயர்தரமானதாக இருந்தது.

எவ்வாறிருப்பினும் அந்த மாவால் மிருதுவான சம்பாத்திகள் தயாராகின. பெண்கள் அதைப் பார்த்து வியந்து போனார்கள். அவர்கள் ஆர்வ மிகுதியால் தமது விரல்களை அந்த மிருதுவான சப்பாத்திகளில் வைத்து, தம்மையும் அறியாமல், ஆஹா! எவ்வளவு மென்மையான மிருதுவான சப்பாத்திகள். இதைவிடச் சிறந்த மாவும் உலகில் இருக்க முடியுமா? என்று கூறுவார்கள்.

சப்பாத்தியோ தயாராகி விட்டது. ஆனால் இங்கு ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களுக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீதிருந்த அன்பு, நேசத்தைக் குறித்தும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தொடர்பாக ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் உணர்வுகள் என்னவாக இருந்தன என்பது பற்றியும் அத்தியாயம் ஆரம்பமாகிறது.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் மிருதுவான சப்பாத்திகளிலிருநது ஒரு சிறு சப்பாத்தியின் ஒரு கலத்தைப் பிய்த்து வாயில் போட்டார்கள். அங்கு நின்று கொண்டிருந்த அந்தப் பெண்கள் அனைவரும், அதை சாப்பிடுவதால் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் நிலை விநோதமாக இருக்கும். மெல்லிய மிருதுவான சப்பாத்திகள். அவர்கள் ருசித்து சாப்பிடுவார்கள். மகிழ்ச்சியை வெளிப்படுத்துவார்கள். அதன் மூலம் சிறப்பான இன்பத்தை உணர்வார்கள் என்ற ஆவலுடன் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் முகத்தைப் பார்க்க ஆரம்பித்தார்கள்.

ஆனால் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் வாயில் அந்தக் கவளம் சென்றதும் யாரோ தொண்டையை அடைத்து விட்டதுபோன்று அந்தக் கவளம் அவர்களின் வாயிலேயே இருந்து விட்டது. அவர்களின் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தோட ஆரம்பித்தது.

அம்மையே! மாவோ மிகவும் நன்றாக இருக்கிறது. சப்பாத்தி எந்த அளவு மென்மையாக இருக்கிறது என்றால், அதற்கு அளவே இல்லை. தங்களுக்கு என்ன ஆகிவிட்டது? தங்களால் அதை விழுங்கவே முடியவில்லையே! அழுகிறீர்களே! இந்த மாவில் ஏதாவது குறை இருக்கிறதா? என்று பெண்கள் கேட்டனர்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறினார்கள்: மாவில் குறைவில்லை. இது மிகவும் மென்மையான மிருதுவான சப்பாத்திதான். இதுபோன்ற பொருளை இதற்கு முன்னர் நாங்கள் கண்டதில்லை. ஆனால் இந்த மாவில் ஏதோ குறை இருப்பதால் எனது கண்களிலிருநது கண்ணீர் வழியவில்லை. மாறாக, எனக்கு அந்த நாட்கள் நினைவுக்கு வந்துவிட்டன. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது வாழ்நாளின் இறுதி பகுதியைக் கடந்து கொண்டிருந்தார்கள். அன்னார் பலவீனம் அடைந்திருந்தார்கள். அவர்களால் கடுமையான உணவுகளை உண்ண முடியாமல் இருந்தது. ஆனால் அந்த நாட்களில் கூட நாங்கள் கற்களால் கோதுமையை இடித்து அதில் சப்பாத்திகளை தயாரித்து அன்னாருக்கு கொடுத்து வந்தோம்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறினார்கள்: எவர்கள் காரணமாக நமக்கு இந்த அருட்கொடைகள் கிடைத்தனவோ அவர்களோ இந்த அருட்கொடைகளை இழந்தவர்களாக சென்று விட்டார்கள். ஆனால் அவர்கள் காரணமாக நமக்கு இந்த கண்ணியங்கள் அனைத்தும் கிடைக்கின்றன. நாம் அந்த அருட்கொடைகளை பயன்படுத்துகிறோம். இதைக் கூறிவிட்டு கவளத்தை உமிழ்ந்து விட்டார்கள்.

பிறகு அன்னார் கூறினார்கள்: இந்த மிருதுவான சப்பாத்திகளை என் முன்னிருந்து கொண்டு சென்று விடுங்கள். எனக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலம் நினைவுக்கு வந்து தொண்டடை அடைக்கிறது. என்னால் இந்த சப்பாத்திகளை சாப்பிட முடியாது.

(ஆயிந்தா வஹீ கவ்மே இஸ்ஸத் பாயேகி ஜோ மாலி வ ஜானி குர்பானியூம் மே ஹிஸ்ஸா லேகி, அன்வாருல் உலூம், தொகுதி 21 பக்கம் 155,156)

ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சஹாபா ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் காலத்தில் மதாயினை வெற்றி கொண்டார்கள். மதாயின் கிஸ்ரா பேரரசரின் தலைமையகமாக இருந்தது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் பள்ளியில் தோலாலான விரிப்பை விரிக்குமாறு சஹாபாவுக்குக் கட்டளையிட்டார்கள். மேலும் போர்ச் செல்வங்கள் குறித்து கட்டளையிட்டார்கள். அவை அந்த விரிப்பில் கவிழ்க்கப்பட்டன.

பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சஹாபா ஒன்று திரண்டார்கள். முதன் முதலில் அன்னாரிடம் போர்ச் செல்வம் பெறத் துவங்கியவர்கள் ஹஸ்ரத் ஹஸன் பின் அலீ (ரலி) ஆவார்கள். நம்பிக்கையாளர்களின் தலைவர் அவர்களே! அல்லாஹ் முஸ்லிம்களுக்கு வழங்கிய செல்வத்திலிருந்து எனது உரிமையை எனக்கு வழங்குங்கள் என்று அன்னார் கேட்டுக் கொண்டார்கள்.

அப்போது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அன்னாரிடம் கூறினார்கள்: மிக மகிழ்ச்சியோடும் மற்றும் கண்ணியத்துடனும், அவர்களுக்கு 1000 திர்ஹம் கொடுக்குமாறு கட்டளையிட்டார்கள். பிறகு ஹஸ்ரத் ஹஸன் (ரலி) அவர்கள் சென்று விட்டார்கள். ஹஸ்ரத் ஹுஸைன் பின் அலீ (ரலி) அன்னாரை நோக்கிச் சென்றார்கள். மேலும் நம்பிக்கையாளர்களின் தலைவர் அவர்களே! அல்லாஹ் முஸ்லிம்களுக்கு வழங்கிய செல்வத்திலிருந்து எனது உரிமையை எனக்கு வழங்குங்கள் என்று அன்னார் கேட்டுக் கொண்டார்கள்.

அப்போது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அவர்களிடம் கூறினார்கள்: மிக மகிழ்ச்சியோடும் கண்ணியத்துடனும், அவர்களுக்கு 1000 திர்ஹம் கொடுக்குமாறு கட்டளையிட்டார்கள். பிறகு அன்னாரின் மகன் அதாவது, ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் மகன் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்கள் அன்னாரை நோக்கிச் சென்றார்கள். மேலும் நம்பிக்கையாளர்களின் தலைவர் அவர்களே! அல்லாஹ் முஸ்லிம்களுக்கு வழங்கிய செல்வத்திலிருந்து எனது உரிமையை எனக்கு வழங்குங்கள் என்று அன்னார் கேட்டுக் கொண்டார்கள்.

அப்போது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அவர்களிடம் கூறினார்கள்: மிக மகிழ்ச்சியோடும் மற்றும் கண்ணியத்துடனும் அவர்களுக்கு 500 திர்ஹம் கொடுக்குமாறு கட்டளையிட்டார்கள். இதைக்கேட்ட அவர்கள் கூறினார்கள்: அதாவது ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்கள் பணிவுடன் கேட்டார்கள். நம்பிக்கையாளர்களின் தலைவர் அவர்களே! நான் ஓர் ஆற்றல் மிக்க ஆடவன் ஆவேன். நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு முன்னால் வாள்வீசி வந்தேன். ஹஸன் மற்றும் ஹுஸைன் (ரலி) அவர்கள் அப்போது சிறு பிள்ளைகளாக இருந்தார்கள். அவர்கள் மதீனாவின் வீதிகளில் சுற்றித்திரிந்து வந்தார்கள். தாங்கள் அவர்கள் இருவருக்கும் 1000 திர்ஹம்களும் எனக்கு 500 திர்ஹம்களும் கொடுத்துள்ளீர்களே?

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: ஆமாம்! சென்று இவர்கள் இருவரின் தந்தையைப் போன்ற தந்தையை என்னிடம் கொண்டு வா. இவர்கள் இருவரின் தாயாரைப் போன்ற தாயாரைக் கொண்டு வா. இவர்கள் இருவரின் தாய்வழிப் பாட்டனார் ((ஸல்) அவர்களைப்) போன்ற தாய்வழிப்பாட்டனாரைக் கொண்டு வா. இவர்கள் இருவரின் தாய்வழிப்பாட்டியாரைப் போன்ற தாய்வழிப்பாட்டியாரைக் கொண்டு வா. இவர்கள் இருவரின் சச்சாவைப் போன்ற சச்சாவைக் கொண்டு வா. இவர்கள் இருவரின் பெரியம்மாவைப் போன்ற பெரியம்மாவைக் கொண்டு வா. நிச்சயமாக! உன்னால் என்னிடம் கொண்டு வர முடியாது.

(இஸாலத்துல் கஃபா அன் கிலாஃபத்துல் குலஃபா – தொகுதி 3 பக்கம் 292–293 – கராச்சியிலுள்ள கதீம் குதுப் கானாவில் அச்சிடப்பட்டது)

அபூ ஜஃபர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மக்களுக்கு உதவித் தொகைகளை நிர்ணயிக்க எண்ணியபோது, அன்னாரின் கருத்து அனைவரின் கருத்தை விடவும் சிறந்ததாக இருந்தது. மக்கள், தங்களிடமிருந்து நீங்கள் ஆரம்பியுங்கள் என்று கூறினார்கள்.

அன்னார் கூறினார்கள்: இல்லை. ஆக அன்னார் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மிக நெருங்கிய உறவினர்களிலிருந்து துவங்கினார்கள். அன்னார் முதலில் ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்களுக்கும், பிறகு ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களுக்கும் பங்கு நிர்ணயித்தார்கள்.

(இஸாலத்துல் கஃபா அன் கிலாஃபத்துல் குலஃபா – தொகுதி 3 பக்கம் 241 – கராச்சியிலுள்ள கதீம் குதுப் கானாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் இமாம் ஹஸன் மற்றும் ஹஸ்ரத் இமாம் ஹுஸைன் (ரலி) ஆகிய இருவருக்கும் கண்ணியமளித்து வந்தார்கள். அவர்களை சவாரி செய்ய வைப்பார்கள். அவர்களின் தந்தையாருக்கு வழங்கி வந்ததுபோன்று அவர்கள் இருவருக்கும் வழங்கி வந்தார்கள்.

ஒரு முறை யமன் நாட்டிலிருந்து சில ஜோடி ஆடைகள் வந்தன. அன்னார் அவற்றை சஹாபியின் மகன்களுக்கு மத்தியில் விநியோகித்து விட்டார்கள். அவர்கள் இருவருக்கும் அவற்றிலிருந்து எதுவும் கொடுக்கவில்லை. மேலும் அவற்றில் அவர்கள் இருவருக்கும் தகுதியான பொருட்கள் எதுவும் இல்லை என்று கூறினார்கள். பிறகு அன்னார் யமன் நாட்டின் துணை அதிகாரிக்கு செய்தி அனுப்பினார்கள். அவர் அவர்கள் இருவருக்கும் பொருத்தமான ஆடைகளை தயாரிக்க வைத்தார்.

(அல்பதாயத்து வன்நஹானியா தொகுதி 4 பக்கம் 214,215 – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இந்தக் குறிப்பு இனி வருங்காலங்களிலும் தொடரும். இன்ஷா அல்லாஹ். இப்போது நான் சில மர்ஹூம்களைப் பற்றியும் கூற விரும்புகிறேன். தொழுகைக்குப் பிறகு ஜனாஸா தொழுகையும் தொழ வைப்பேன்.

இவர்களில் முதலாவது குறிப்பு, நாஸிர் பைத்துல் மால் ஆக இருந்த குஜராத்தைச் சேர்ந்த தர்வேஷ் மர்ஹூம் ஃபய்ஸ் அஹ்மத் சாஹிப் அவர்களின் துணைவியாரான ஸுஹைலா மஹ்பூப் சாஹிபா அவர்களுடையதாகும். ஸுஹைலா சாஹிபா அவர்கள் 90 வது வயதில் வஃபாத் ஆகிவிட்டார்கள். اِنَّا لِلّٰہِ وَاِنَّاۤ اِلَیۡہِ رٰجِعُوۡنَ

அல்லாஹ்வின் அருளால் மூஸியாவாக இருந்தார்கள். இவர்கள் பிஹாரின் ஒரு கல்விகற்ற குடும்பத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தார்கள். இவர்களின் தந்தை அஹ்மதி இல்லை. ஆனால் இவர்களின் தாயார் தமது தந்தையார் பைஅத் செய்த பிறகு தாமே நூல்களை வாசித்து ஜமாஅத்தில் இணைந்தார்கள்.

தமது கணவர் பாராமுகமாக இருந்ததன் காரணமாக மூன்று நான்கு ஆண்டுகள் வரை மிகவும் கஷ்டத்திற்கு ஆளானார்கள். ஆனால் அஹ்மதிய்யதில் உறுதியாக நிலைத்து நின்றார்கள். இவர்களுடைய கணவர் அஹ்மதி ஆகவில்லை. ஆனால் பிற்காலத்தில் எதிர்ப்பை விட்டு விட்டார். அஹ்மதி வீடுகளிலேயே மகள்களின் திருமணமும் நடந்துள்ளது. இவ்வாறு ஸுலைஹா சாஹிபா அவர்களின் திருமணமும் அஹ்மதிகளிலேயே நடைபெற்றது.

1958 ஆம் ஆண்டு மர்ஹூமா அவர்களின் தாயார் தமது மகள் ஸுஹைலா மஹ்பூப் அவர்களோடு முதல் முறை காதியானுக்கு வந்தார்கள். ஸுஹைலா மஹ்பூப் சாஹிபா அவர்கள் கூறுகிறார்கள்: இவர்களுக்கு காதியான் மீது மிகவும் அன்பு ஏற்பட்டது. எவ்வாறாவது அவர்கள் காதியானிலேயே குடியமர்ந்து விட வேண்டும் என்று அதிகமாக துஆ செய்தார்கள். எவ்வாறிருப்பினும் இவர்கள் வாழ்வை அர்ப்பணித்தார்கள்.

அப்பொழுது நாஸிர் கித்மத்தே தர்வேஷான் ஆக இருந்த ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் அவர்கள் வாழ்வை அர்ப்பணித்தலுக்கான கடிதத்திற்கு இவர்களுக்கு இவ்வாறு பதில் கடிதம் எழுதினார்கள்: எனக்கு உங்களுடைய வக்ஃப்ப் பற்றி தெரிய வந்தது. நீங்கள் முன் எடுத்து வைத்துள்ள இந்த அடி மிகவும் மதிக்கத்தக்கதாகும். வக்ஃபின் கீழ் உங்களுடைய தலையாய கடமையானது, மார்க்க அறிவைக் கற்றுக் கொள்ளுங்கள். உங்களுடைய செயல்களை இஸ்லாம் மற்றும் அஹ்மதிய்யத்துக்கு ஏற்ப ஆக்குங்கள். இவ்வாறு சிறந்த முன்மாதிரி ஏற்படும். எவ்வாறிருப்பினும் இவர்கள் வாழ்வை அர்ப்பணித்தார்கள்.

1964 ஆம் ஆண்டு மர்ஹூமா அவர்களுடைய திருமணம் தர்வேஷ் சவுத்ரி அப்துல்லாஹ் சாஹிப் அவர்களுடன் நடைபெற்றது. அவர்கள் மூலம் ஒரு மகள் பிறந்தார். ஆனால் சில காலங்களுக்குப் பிறகு பிரிவு ஏற்பட்டு விட்டது. பிறகு இவர்களுக்கு குஜராத்தைச் சேர்ந்த சவுத்ரி ஃபய்ஸ் அஹ்மத் சாயிப் அவர்களுடன் இரண்டாவது திருமணம் நடைபெற்றது. அவர்கள் மூலமாக ஒரு மகன் பிறந்தார். ஆனால் அவர் சிறு வயதிலேயே வஃபாத் ஆகிவிட்டார். ஆக மர்ஹூமா அவர்களுக்குப் பணி ஓய்வு பெறும் வரை கிட்டத்தட்ட 30 ஆண்டுகள் வரை காதியானிலேயே நுஸ்ரத் கேல்ஸ் ஹைஸ்கூலில் தலைமை ஆசிரியையாகத் தொண்டாற்றும் நல்வாய்ப்பு கிடைத்தது.

இரண்டாவது குறிப்பு, இயக்கத்தின் முரப்பி ராஜா குர்ஷீத் அஹ்மத் முனீர் சாஹிப் அவர்களுடையதாகும். அவர்கள் இன்றைய நாட்களில் ஆஸ்திரேலியாவில் இருந்தார்கள். அங்கு இவர்கள் வஃபாத் ஆகிவிட்டார்கள். اِنَّا لِلّٰہِ وَاِنَّاۤ اِلَیۡہِ رٰجِعُوۡنَ

மர்ஹூம் மூஸியாக இருந்தார்கள். இவர்களுக்கு நீண்ட காலம் பாகிஸ்தானிலும் பாகிஸ்தானிலுள்ள காஷ்மீரின் பல்வேறு பகுதிகளிலும் இயக்கத்தின் முரப்பியாகத் தொண்டாற்றுவதற்கு நல்வாய்ப்பு கிடைத்தது. இயக்கத்தின் ஒரு வீரமான முரப்பியாக இருந்தார்கள்.

பாகிஸ்தானிலுள்ள காஷ்மீரில் தொண்டாற்றி வந்தபோது அவர்கள் அதிகமான எதிர்ப்பையும் எதிர்கொள்ள வேண்டி வந்தது. 1974 இன் அமளி நிறைந்த காலத்தில் மிகவும் வீரத்துடன் எதிர்ப்பை எதிர்கொண்டார்கள். ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் ஒரு கூட்டத்தில் இவர்கள் தொடர்பாக இவ்வாறு கூறினார்கள்: அங்கு நம்முடைய ஒரு வீரமான முரப்பி இருக்கிறார்கள். வீரமான முரப்பி என்ற பட்டத்தை வழங்கினார்கள்.

ராஜா குர்ஷீத் அஹ்மத் முனீர் சாஹிப் அவர்கள் ராவல்பிண்டியில் தமது ஒரு வீட்டையும் ஜமாஅத்திற்கு நற்கொடையாக வழங்கினார்கள். ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் தம் காலத்தில் இவர்களின் நன்கொடையை ஏற்றுக் கொண்டார்கள். ராஜா சாஹிப் அவர்கள் இந்தியா பாகிஸ்தான் பிரிவினைக்குப் பிறகு அஹ்மத் நகர் சென்று விட்டார்கள். அங்கிருந்து, ஜாமிஆ அஹ்மதிய்யா ஆரம்பிக்கப்பட்ட பிறகு, அங்கு இவர்கள் படித்து வந்தார்கள். செலவுகளை சரி கட்டுவதற்காக ஒரு

## திருக்குர்ஆனிலிருந்து...

(செவியேற்பவரே!) இப்ராஹீம் இவ்வாறு கூறிய நேரத்தை (நினைத்துப் பாரும்). என் இறைவா! இந்த (மக்கா) நகரத்தை அமைதிக்குரியதாக்கி வைப்பாயாக. நாங்கள் பொய் தெய்வங்களை வணங்குவதிலிருந்து என்னையும், என் சந்ததிகளையும் காப்பாயாக. (14:36)

A.Basheer Ahmad (Naib Sec.Maal, Melapalayam)

சிறிய அறையிலேயே இவர்கள் கடை திறந்து விட்டார்கள்.

பிறகு 1948 இல் ஃபுர்கான் பட்டாலினிலும் கலந்து கொண்டார்கள். 1949 ஆம் ஆண்டு மவ்லவி ஃபாஸில் தேர்வில் தேர்ச்சி பெற்றார்கள். ஜாமிஆவின் ஷாஹித் பட்டப்படிப்பில் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்ற பிறகு இயக்கத்தின் முரப்பியாக பாகிஸ்தானின் பல்வேறு பகுதிகளிலும் காஷ்மீரிலும் மார்க்கத் தொண்டுகள் ஆற்றினார்கள். 1974 இல் இவர்கள் வீட்டின் மீது தாக்குதல் தொடுக்கப்பட்டது. ஆனால் இவர்கள் மிகவும் வீரமாக எதிர்கொண்டார்கள். மக்கள் திரளின் கல்வீச்சுக்களினால் காயமும் அடைந்தார்கள். ஆனால் எவ்வாறிருப்பினும் வீட்டு மக்கள் அனைவரும் பாதுகாப்பாக இருந்தார்கள்.

இவர்கள் எப்பொழுதும் உறுதியாக நிலைநிற்குமாறு வலியுறுத்தி வந்தார்கள். இறை ஜமாஅத்துகளுக்கு இதுபோன்ற சோதனைகளும் பரீட்சைகளும் வரத்தான் செய்யும் என்று கூறி வந்தார்கள். இந்த நிலைமைகளிலும் மிகவும் துணிச்சலுடன் ஜமாஅத்துகளில் சுற்றுப் பயணங்கள் மேற்கொண்டு வந்தார்கள். மக்களின் வீடுகளுக்குச் சென்று வந்தார்கள். ஜமாஅத் மக்களைச் சந்திக்கச் செல்லும்போது, சுற்றுப் பயணங்களுக்கிடையில் மக்கள் இவர்களைப் பிடித்து அடிப்பது பலமுறை நிகழ்ந்துள்ளது. ஆனால் இவர்கள் ஒருபோதும் முறையிட்டதில்லை. இவர்களுக்கு நான்கு மகன்களும், நான்கு மகள்களும் இருக்கிறார்கள். மர்ஹூம் இன்றைய நாட்களில் ஆஸ்திரேலியாவில் இருந்தார்கள். அங்கேயே இவர்கள் வஃபாத் ஆகிவிட்டார்கள்.

அடுத்த குறிப்பு, ஸமீர் அஹ்மத் நதீம் சாஹிப் அவர்களுடையதாகும். இவர்கள் 54 வயதில் வஃபாத் ஆகிவிட்டார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْن

இவர்களுக்குப் புற்றுநோய் இருந்தது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சஹாபியான இவர்களின் கொள்ளுப் பாட்டனார் ரஹீம் பக்ஷ் சாஹிப் (ரலி) அவர்கள் மூலமாக 1897 இல் இவர்களின் குடும்பத்தில் அஹ்மதிய்யத் வந்தது. இவர்களின் கொள்ளுப்பாட்டனார் அவர்கள் இமாம் மஹ்தி வந்து விட்டார்கள் என்பதைக் கேள்விப்பட்டதும், குர்தாஸ்பூர் மாவட்டத்திலிருக்கும் தமது கிராமமான ஷிகார்பூர் மாச்சியானிலிருந்து காதியான் ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்வதற்காகச் சென்றார்கள். மேலும் பைஅத் செய்து விட்டார்கள்.

பிறகு தமது ஓர் அன்பர், மெஹர் தீன் சாஹிப் அவர்களுக்கு எடுத்துக் கூறினார்கள். அவர்களும் சென்றார்கள். அவர்களும் பைஅத் செய்து விட்டார்கள். பிறகு இவர்களின் தப்லீக் மூலமாக கிட்டத்தட்ட முழு கிராமமும் அஹ்மதியாகி விட்டது. ஸமீர் சாஹிப் அவர்கள் ஜாமிஆ தேர்ச்சி பெற்ற பிறகு உள்ளூர் இஸ்லாஹோ இர்ஷாத் துறையின் கீழ் சில காலம் செயல் களத்தில் பணியாற்றினார்கள். பிறகு மஜ்லிஸ் நுஸ்ரத் ஜஹான் பந்தி கமிட்டி அலுவலகத்தில் இவர்கள் பணிநியமிக்கப்பட்டார்கள். பிறகு நஸாரத் இஸ்லாஹ் வ இர்ஷாத் மர்கஸிய்யாவின் கீழ் தொண்டாற்றும் நல்வாய்ப்பும் பெற்றார்கள்.

2005 ஆம் ஆண்டிலிருந்து வஃபாத் வரை இவர்கள் வரவேற்புத் துறையின் முஆவின் நாஸிர் வஸிய்யத் ஆக இருந்தார்கள். அல்லாஹ் இவர்களுக்கு ஒரு மகனையும் ஒரு மகளையும் வழங்கினான். இவர்களின் மகனும் இயக்கத்தின் முரப்பி ஆவார்கள். இவர்களுக்கு நன்றாகத் தொடர்புகளையும் உருவாக்கத் தெரிந்திருந்தது. நல்ல கூடைப்பந்து விளையாட்டு வீரராகவும் இருந்தார்கள். இதன் காரணமாக தொடர்புகள் ஏற்பட்டன. பிறகு அந்தத் தொடர்புகளை ஜமாஅத்துக்காக பயன்படுத்தியும் வந்தார்கள். பலன் பெற்றும் வந்தார்கள்.

தஹஜ்ஜுத் தொழக்கூடியவராக இருந்தார்கள். அல்லாஹ்வின் மீது அதிக தவக்குல் இருந்தது. கஷ்ட நேரத்தில் உடனடியாக இரண்டு ரக்அத் நஃபில் தொழுவதும் காலத்தின் கலீஃபா அவர்களுக்குக் கடிதம் எழுதுவதும் இவர்களின் வழக்கமாக இருந்தது. அல்லாஹ்வின் அருளால் இவர்களின் துஆக்கள் மற்றும் நஃபில்களை அல்லாஹ் ஏற்றுக் கொண்டும் வந்தான்.

அடுத்த குறிப்பு, தன்ஸானிய்யாவைச் சேர்ந்த மதிப்பிற்குரிய ஈஸா மவ்க்கீ தல்மியா சாஹிப் அவர்களுடையதாகும். கடந்த நாட்களில் அன்னார் வஃபாத் ஆகிவிட்டார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْن

இவர்கள் கிருஸ்துவ குடும்பத்தில் பிறந்தார்கள். 19 வயதில் அக்கம் பக்கத்து சூழலின் காரணமாக மார்க்க உரையாடல்களில் ஆர்வம் ஏற்பட்டது. இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளும் நற்பாக்கியம் பெற்றார்கள். சில ஆண்டுகளுக்குப் பிறகு ஜமாஅத்தின் கொள்கைகள் பற்றி அறிமுகம் கிடைத்தது. அதை ஆய்வு செய்த பிறகு 1992 ஆம் ஆண்டு பைஅத் செய்து அஹ்மதிய்யா ஜமாஅத்தில் இணைந்து விட்டார்கள்.

பைஅத்துக்குப் பிறகு மர்ஹூமுக்குள் ஒரு தூய மாற்றம் உருவானது. அது இவர்களுக்கு நெருக்கமானவர்களுக்கும் தெளிவாகப் புலப்பட்டது. இவர்களின் இந்தத் தூய மாற்றத்தைப் பார்த்து இவர்களின் துணைவியாரும் பைஅத் செய்து விட்டார்கள். பைஅத்துக்குப் பிறகு மர்ஹூம் தமது மார்க்க அறிவை அதிகரித்துக் கொள்வதற்கு மிகவும் கடினமாக உழைத்தார்கள். தமது பணிகளுக்கிடையிலும் இஸ்லாம் அஹ்மதிய்யத்தின் தப்லீகுக்கான சந்தர்ப்பத்தை கைநழுவ விட மாட்டார்கள். சந்தாக்கள் செலுத்துவதில் எப்பொழுதும் முன்னனியில் இருந்தார்கள். இறைவழியில் கொடுப்பதனால் வியாபாரத்திலும் செல்வத்திலும் பரக்கத் ஏற்படுகிறது என்று பலமுறை தெளிவுபடுத்தியுள்ளார்கள். இவர்கள் வியாபாரம் செய்து வந்தார்கள்.

மிகவும் நெருங்கிப் பழகக்கூடியவராகவும், நல்லொழுக்கமுடையவராகவும் பணிவுள்ள மனிதராகவும் இருந்தார்கள். வாழ்வை அர்ப்பணித்தவர்கள், ஜமாஅத் பொறுப்பாளர்கள் மற்றும் ஊழியர்களுக்கு மிகவும் கண்ணியம் அளித்து வந்தார்கள். மர்ஹூம் மூஸியாக இருந்தார்கள். பின்விட்டுச் சென்றவர்களில் இரண்டு துணைவியர்களும், பத்து பிள்ளைகளும் இருக்கிறார்கள்.

தன்ஸானியாவின் அமீர், மிஷனரி இன்சார்ஜ் எழுதுகிறார்கள்: மர்ஹூம், டாக்டர் தாருஸ் ஸலாம் உடைய மண்டல தலைவராக நியமிக்கப்பட்டார்கள். இவர்களின் இயல்பில் எளிமை தெளிவாகத் தெரிந்தது. அதன் காரணமாக மக்களின் உள்ளத்தில் இடம்பிடித்து வந்தார்கள். மௌனமாகத் தொண்டாற்றும் சான்றோராக இருந்தார்கள். பிறகு இவர்கள் தன்ஸானிய்யாவின் துணை அமீராக நியமிக்கப்பட்டார்கள். அந்தப் பணியிலும் மிக உயர்ந்த வகையில் தமது தொண்டுகளை ஆற்றினார்கள்.

மிகவும் ஆலோசனை வழங்கக்கூடிய சான்றோராக இருந்தார்கள். எப்பொழுதும் ஜமாஅத் அமைப்புக்கு கண்ணியம் அளிக்கக்கூடியவராகவும், ஜமாஅத்தின் உயர்நிலையைக் கருத்திற் கொள்ளக்கூடியவராகவும் இருந்தார்கள். அஹ்மதிகள் ஒருவர் மற்றவருடன் நல்ல முறையில் பழகுமாறும் அஹ்மதிய்யா கிலாஃபத்துடன் இணைந்திருக்குமாறும் எப்போதும் வலியுறுத்திக் கூறி வந்தார்கள்.

ஜமாஅத் பொறுப்பாளர்களின் சொந்தத் தேவைகளையும் கருத்திற் கொண்டு வந்தார்கள். சாத்தியமான எல்லா ஒத்துழைப்புகளையும் செய்ய முயற்சித்து வந்தார்கள். இன்னும் சொல்வதென்றால், ஊழியர்கள் பேருந்துகளில் வரும்போது அவர்களின் நேரம் வீணாகி விடக்கூடாது என்பதற்காகத் தமது பணிக்கு அலுவலகம் செல்லும்போது காலையில் தமது வாகனத்தில் ஊழியர்களை அழைத்து வருவார்கள்.

தொழுகை சென்டர் ஆக தமது வீட்டில் ஒரு அறையை ஒதுக்கியிருந்தார்கள். அங்கு தொழுகை நிறைவேற்றப்பட்டு வந்தது. மூஸியான்கள் ஹிஸ்ஸா ஜாயிதாத் செலுத்த வேண்டும் என்று இவர்களுக்குக் கூறப்பட்டபோது, இவர்கள் எல்லாருக்கும் முதலாவதாகத் தமது இரண்டு

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A.Shamsul Alam (Qaid, Melapalayam)

விலையுயர்ந்த சொத்துக்களை சொத்து மதிப்பீடு செய்ய வைத்து, ஹிஸ்ஸா ஜாயிதாத் செலுத்தி விட்டார்கள்.

அடுத்த குறிப்பு, நஸாமத் தஃமீராத் காதியானின் சூப்பர் வைஸர் மதிப்பிற்குரிய ஷேக் முபஷ்ஷிர் அஹ்மத் சாஹிப் அவர்களுடையதாகும். இவர்கள் இந்தியாவின் ஒடிசா மாநிலத்தின் கேரங் ஜமாஅத்தைச் சேர்ந்த ஷேக் இஸ்ரார் அஹ்மத் சாஹிப் அவர்களின் மகனாவார்கள். இவர்களும் கடந்த நாட்களில் கொரோனா தொற்றின் காரணமாக வஃபாத் ஆகிவிட்டார்கள். اِنَّا لِلّٰہِ وَاِنَّاۤ اِلَیۡہِ رٰجِعُوۡنَ

மர்ஹூம் பிறப்பால் அஹ்மதியாவார்கள். இவர்களின் குடும்பம் பழைய அஹ்மதி குடும்பங்களில் ஒன்றாகும். மிகவும் நல்லொழுக்கமுள்ள தொழுகையாளியாகவும், மார்க்கத் தொண்டுக்காக ஆயத்தமாக இருக்கக்கூடிய, இயக்கத்தின் தொண்டராகவும் இருந்தார்கள். எட்டு ஆண்டுகளாக மர்ஹூம் நஸாமத் தஃமீராத் காதியானில் மிகவும் நல்ல முறையில் சூப்பர் வைஸராகத் தொண்டாற்றி வந்தார்கள். மிகவும் பொறுமையாக ஆழ்ந்து சிந்தித்துப் பணியாற்றக்கூடியவராக இருந்தார்கள். தமது பணிகளை மிகவும் ஆழமாக சென்று பார்த்து வந்தார்கள். பின்விட்டுச் சென்றவர்களில், துணைவியார் மட்டுமின்றி பெற்றோரும் இரண்டு சகோதரரும் ஒரு சகோதரியும் இருக்கிறார்கள்.

அடுத்த குறிப்பு, மதிப்பிற்குரிய ஸைஃப் அலி ஷாஹித் சாஹிப் அவர்களுடையதாகும். இவர்கள் சிட்னியில் வஃபாத் ஆகிவிட்டார்கள். اِنَّا لِلّٰہِ وَاِنَّاۤ اِلَیۡہِ رٰجِعُوۡنَ

அல்லாஹ்வின் அருளால் மூஸியாக இருந்தார்கள். இவர்களின் தாய்வழி உறவில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சஹாபிகளான சவுத்ரி முஹம்மத் அலி சாஹிப் (ரலி) அவர்களும் சவுத்ரி காமே கான் சாஹிப் (ரலி) அவர்களும் இருந்தார்கள். இவர்கள் அவர்கள் இருவரின் மகள்வழிப் பேரராகவும், கொள்ளுப் பேரராகவும் இருந்தார்கள்.

இவர்களின் சகோதரர் ஹைதர் அலி ஸஃபர் சாஹிப் ஜெர்மனியில் இயக்கத்தின் முரப்பியாவார்கள். இன்றைய நாட்களில் துணை அமீராக உள்ளார்கள். அவர்கள் கூறுகின்றார்கள்: 1961 ஆம் ஆண்டு இவர்கள் மெட்ரிக் படித்து விட்டு ஹைதராபாதில் பணியில் சேர்ந்தார்கள். அதற்குப் பிறகு சகோதரர்களாகிய எங்கள் இருவரின் கல்விச் செலவையும் சுமந்து வந்தார்கள். எங்களது செலவுகளையும் நிறைவேற்றி வந்தார்கள். இவர்கள் பெற்றோர்களுக்கும் மனமாற தொண்டாற்றினார்கள். மிகவும் நெருங்கிப் பழகக்கூடியவராகவும் மென்மையாகப் பேசக்கூடியவராகவும் பணிவுள்ள மனிதராகவும் இருந்தார்கள். பிள்ளைகளுடன் பரிவுடனும் இளைஞர்களுடன் அன்புடனும் பழகி வந்தார்கள்.

ஜமாஅத் அமைப்பு மற்றும் கிலாஃபத்துடன் அளவு கடந்த அன்பு மற்றும் கட்டுப்படுதலுக்கான தொடர்பு இருந்தது. பிள்ளைகளுக்குக் கூட எப்பொழுதும் கிலாஃபத்தோடு அன்பு மற்றும் கட்டுப்படுதலுக்கான பாடம் வழங்கி வந்தார்கள். பொறுப்பாளர்களுக்கு மிகவும் கண்ணியமளித்து வந்தார்கள். எப்போதும் எந்தப் பொறுப்பாளருக்கு எதிராகவும் எந்த விஷயத்தையும் கேட்பதைப் பொறுத்துக் கொள்ள மாட்டார்கள். மிகவும் துஆ செய்யக்கூடிய மனிதராக இருந்தார்கள்.

தஹஜ்ஜுத் தொழுகையை நிறைவேற்றி வந்தார்கள். தொழுகைகளை சரிவரத் தொழக்கூடியவராக இருந்தார்கள். இவர்கள் பாகிஸ்தானில் இருந்தபோது, இவர்களுக்கு பொருளாளராகவும், வக்ஃபே ஜதீத் செயலராகவும் தொண்டாற்ற நல்வாய்ப்பு கிடைத்தது. பிறகு ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் மீர்பூர் காஸில் இவர்களை சத்ர் ஜமாஅத்தாக நியமித்தார்கள். அமாரத் ஏற்படும் வரை இவர்கள் அங்கு சத்ர் ஜமாஅத்தாக இருந்தார்கள். டாக்டர் அப்துல் மன்னான் சித்தீக்கி சாஹிப் அவர்கள் ஷஹீதான பிறகு இவர்களுக்கு உள்ளூர் அமீராகவும் மாவட்ட அமீராகவும் தொண்டாற்றுவதற்கும் நல்வாய்ப்பு கிடைத்தது.

ஆஸ்திரேலியா செல்லும் வரை இவர்கள் மீர்பூர் காஸுடைய மாவட்ட அமீராக இருந்தார்கள். இவர்களுக்குக் கிளை அமைப்புகளிலும் அதிகம் தொண்டாற்றும் நல்வாய்ப்பு கிடைத்தது. இவ்வாறே ஆஸ்திரேலியாவில், ஆஸ்திரேலியாவின் கஸா போர்டுடைய உறுப்பினராக இருந்தார்கள். அன்ஸாருல்லாஹ்வின் நாயிப் சத்ர் அவ்வலாகவும் இருந்தார்கள்.

இவ்வாறே இவர்கள் 2016 லிருந்து ஜமாஅத்தில் ரிஷ்தா நாத்தா செயலராகப் பணியாற்றி வந்தார்கள். இவர்களின் வாழ்நாளில் இரண்டு மகன்கள் இறந்தும் போயிருக்கிறார்கள். மிகவும் பொறுமையுடன் இவர்கள் இந்தப் பெருந்துயரங்களைப் பொறுத்துக் கொண்டார்கள். எவ்வாறிருப்பினும், பின்விட்டுச் சென்றவர்களில் துணைவியார் மட்டுமின்றி இவர்களின் நான்கு மகன்களும் இருக்கின்றார்கள்.

அடுத்த குறிப்பு ரஷீத் அஹ்மத் ஹயாத் சாஹிப் அவர்களுடைய மகன் மதிப்பிற்குரிய மசூது அஹ்மத் ஹயாத் சாஹிப் அவர்களுடையதாகும். இவர்கள் 80 வது வயதில் வஃபாத் ஆகிவிட்டார்கள். اِنَّا لِلّٰہِ وَاِنَّاۤ اِلَیۡہِ رٰجِعُوۡنَ

இவர்களின் குடும்பத்திலும் சவுத்ரீ பீர் பக்ஷ் சாஹிப் அவர்களின் மகனான இவர்களின் தந்தைவழிப் பாட்டனார் ஹஸ்ரத் பாபூ உமர் ஹயாத் சாஹிப் (ரலி) அவர்கள் மூலமாக அஹ்மதிய்யத் வந்தது. உமர் ஹயாத் சாஹிப் (ரலி) அவர்கள் 14 வயதில் 1898 இல் பைஅத் செய்து அஹ்மதிய்யா இயக்கத்தில் இணைந்தார்கள். முதலில் இராணுவத்தில் பணிபுரிந்தார்கள். பிறகு அவர்கள் கென்யா சென்று விட்டார்கள்.

மசூது ஹயாத் சாஹிப் அவர்கள் 1967 ஆம் ஆண்டு கென்யாவிலிருந்து யூ.கே வந்து விட்டார்கள். பிறகு இங்கேயே நிரந்தரமாக வசிக்க ஆரம்பித்து விட்டார்கள். மிகவும் நயமான இயல்புடையவராகவும், தொழுகை மற்றும் நோன்பை பேணக்கூடியவராகவும் இருந்தார்கள். நல்லொழுக்கமுடையவராகவும் நன்றாக பழகக்கூடியவராகவும், விருந்தோம்பல் செய்யக்கூடியவராகவும், பரிவுள்ள மனிதராகவும் இருந்தார்கள். இவர்களுக்கு இரண்டு முறை ஹஜ் செய்ய நல்வாய்ப்பு கிடைத்தது. ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களுடன் பல்வேறு நாடுகளின் சுற்றுப்பயணங்களில் வாகனம் ஓட்டுதல் மற்றும் பாதுகாப்புப்பணி ஆகிய தொண்டுகள் செய்ய நல்வாய்ப்பு கிடைத்தது.

1983 ஆம் ஆண்டு பைத்துல் அஹத் பள்ளிவாசல் வாங்கப்பட்டபோது, அதில் எல்லாரையும் விட அதிக பங்கு மர்ஹூம் மற்றும் அன்னாரின் துணைவியாரான மர்ஹூமா தாஹிரா ஹயாத் சாஹிபா அவர்களுடையதாக இருந்தது. பொருளாதார அடிப்படையில், அல்லாஹ் அவர்கள் மீது சிறப்பருள் புரிந்திருந்தான். அந்தச் செல்வத்தின் பெரும் பகுதியை அல்லாஹ்வின் வழியில் செலவும் செய்து வந்தார்கள்.

இலண்டனின் ஜமாஅத்தான ரெட் பிரிஜ் ஈஸ்ட் தனியானபோது, அந்த ஜமாஅத்திற்கு தனியாக எந்தப் பள்ளிவாசலும் இல்லை. அது இவர்களுக்கு தெரிய வந்தபோது, இவர்கள் தமது வீட்டின் ஒரு பகுதியை ஜமாஅத்துக்காக அர்ப்பணித்து விட்டார்கள். அங்கு மூன்று ஆண்டுகள் வரை ஜமாஅத் சென்டர் நிலைபெற்றிருந்தது. ஜமாஅத்தின் பல்வேறு பணிகளும் அங்கு நடந்து வந்தன. இவர்களுக்கு இரண்டு மகன்கள் உள்ளனர். முதல் துணைவியாரோ வஃபாத் ஆகிவிட்டார்கள். இரண்டாவது துணைவியாரும் இரண்டு மகன்களும் உள்ளனர்.

அல்லாஹ் இந்த அனைத்து மர்ஹூம்களுடனும் பாவமன்னிப்பு மற்றும் கருணையோடும் நடந்து கொள்வானாக. இவர்களின் சந்ததிகளையும் அஹ்மதிய்யத்தோடு இணைத்து வைப்பானாக. இவர்களின் துஆக்களை இந்த சான்றோர்களின் துஆக்களை சந்ததிகளின் ஹக்கிலும் ஏற்றுக் கொள்வானாக. நான் கூறியதுபோன்று தொழுகைக்குப் பிறகு ஜனாஸா தொழ வைப்பேன்.

(தமிழில்: மவ்லவி அதாவுல் முஜீப்)

......☆......☆......☆......

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A.Nasir Ahmad (Ameer, Melapalayam)

*(தஃப்ஸீரே கபீர்....*
*முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)*

ஏற்பட்டுக் கொண்டே இருக்கும். இஸ்லாம் துவக்கம் முதலே لَا اِلٰہَ اِلَّا اللّٰہُ مُحَمَّدٌ رَّسُوْلُ اللّٰہِ என்று கூறியது. பிற்காலத்தில் அதில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை. ஆனால் (இதற்கெதிரில்) பொய்யான மார்க்கங்களுக்கு அதன் அடிப்படை சட்டங்களை எப்போதும் மாற்றிக் கொண்டிருப்பதற்கு அவசியம் நேரிடும்.

உதாரணமாக, பஹாயீ மார்க்கத்தினரை பாருங்கள். ஈரானுக்கு சென்றால் அங்கு பஹாயி மார்க்கத்தின் போதனை வேறொரு வடிவில் முன் வைக்கப்படுகின்றது. ஏனென்றால் அங்கு ஷியாக்கள் உள்ளனர். சன்னி நாடுகளில் அதே மார்க்கத்தின் போதனை வேறொரு வடிவில் முன் வைக்கப்படுகின்றது. அமெரிக்காவிற்கு சென்றால் அடிப்படை சட்டம் முற்றிலும் வேறுபட்டதாக ஆக்கப்பட்டு விட்டது. அதேபோன்று இங்கிலாந்திற்கு சென்றால் அங்குள்ள மக்கள் ஏற்றுக் கொள்வதற்கு தயாராக இருக்கின்ற விஷயங்கள் முன் வைக்கப்படுகின்றன.

எனவே நான் இங்கிலாந்து சென்றிருந்தபோது பஹாஹீ மார்க்கத்தைச் சேர்ந்த ஒரு பெண்மணி என்னிடம் உரையாடினார். அவரிடம், பஹாவுல்லாஹ் என்ன புதிய விஷயத்தை எடுத்து வைத்துள்ளார் என்று நான் கேட்டேன். அதற்கு அவர், ஒரேயொரு பெண்ணை மட்டுமே திருமணம் செய்ய வேண்டும் என்று பஹாவுல்லாஹ் கூறியுள்ளதாக அவர் கூறினார். அதற்கு நான் அவரிடம், அவர் (பஹாவுல்லாஹ்) சுயமே இரண்டு திருமணங்கள் செய்துள்ளாரே? என்று கேட்டேன். முதலில் அவர் அதை மறுத்தார். பின்னர் அது வாதத்திற்கு முந்தைய விஷயமாகும் என்று கூறினார்.

நவூதுபில்லாஹ் அவர் இறைவனாக இருந்தார் என்றால் பின்னர் முந்தைய பிந்தைய விஷயங்களுக்கான கேள்வி எழாது என்று நான் கூறினேன். மறைவானவற்றை அறிந்தவருக்கு முந்தைய பிந்தைய விஷயங்கள் எந்தப் பொருளும் தராது. பிற்காலத்தில் நான் எந்த போதனையை வழங்க இருக்கின்றேன் என்பதை அவர் முன்பே அறிந்திருக்க வேண்டும். மேலும் வாதத்திற்குப் பிறகு அவர் தனது மகன் அப்பாஸ் என்பவருக்கு இரண்டு திருமணங்கள் செய்ய அனுமதி வழங்கியுள்ளார். ஏனென்றால் அவருக்கு சந்ததி இல்லாமல் இருந்தது. அப்போது அந்தப் பெண்ணின் காதில் ஈரானிய பஹாஹீ மார்க்கத்தைச் சேர்ந்த பெண்மணி ஒருவர் இரகசியமாக இவ்வாறு கூறினார்: அதாவது பஹாவுல்லாஹ் தனது இரண்டாவது மனைவியை தனது சகோதரியாக ஆக்கிக் கொண்டார். அதே விஷயத்தை அந்த ஆங்கில பெண்மணியும் எடுத்துரைத்தார்.

அப்போது நான் கூறினேன்: பஹாவுல்லாஹ்வின் வாதத்திற்குப் பிறகு இரண்டு மனைவிகள் மூலமும் பிள்ளைகள் பிறந்துள்ளன. சகோதரி மூலமும் பிள்ளை பெற்றுக் கொள்வார்களா என்ன? அப்போது அவர் வியப்படைந்து தனது தோழியிடம் இவ்வாறு கேட்டார்: வாதத்திற்குப் பிறகு இரண்டாவது மனைவி மூலமும் பிள்ளைகள் பிறந்தனவா? அதற்கு அவர், ஆம்! என்று கூறியதும் சபையில் அனைவரும் சிரித்தனர். இப்போது தான் அவர் சகோதரியாக ஆக்கினார். அதே நேரத்தில் அவர் மூலம் பிள்ளைகள் பிறந்ததையும் அவர் ஒப்புக் கொண்டு விட்டார் என்று மக்கள் சிரித்தனர்.

சுருக்கமாக, பஹாயி கூட்டத்தினர் ஒவ்வொரு நாட்டிலும் சென்று தனியான சட்டத்தை உருவாக்கிக் கொள்கின்றனர். கிறிஸ்துவத்தின் நிலையும் இவ்வாறே உள்ளது. எனவே அவர்களின் மிஷனரி புத்தகங்களில் இவ்வாறு தெளிவாக விவாதம் நடந்துள்ளது. அதாவது ஒவ்வொரு சமுதாயத்தின் முன்பும் மஸீஹ் (அலை) அவர்களை எந்த வடிவில் முன் வைக்க வேண்டும்? துவக்க காலத்தில் கிறிஸ்துவத்திலும் ரோம்வாசிகள் இந்த விண்ணப்பத்தை முன் வைத்தனர். அதாவது சபத் நாள் சனிக்கிழமைக்கு பகரமாக ஞாயிற்றுக்கிழமை இருக்க வேண்டும். அப்போது கிறிஸ்துவர்கள் அவர்களுக்காக சனிக்கிழமைக்கு பகரமாக ஞாயிற்றுக்கிழமையை சபத் நாளாக ஆக்கிக் கொண்டனர்.

இதற்கெதிரில் இஸ்லாத்தின் அனைத்து போதனைகளும் ஒரு வேரில் நிலைபெற்றுள்ளது. அதனை குறைப்பதற்கும் அவசியமில்லை; கூட்டுவதற்கும் அவசியமில்லை. துவக்கம் முதலே இஸ்லாம் لَا اِلٰہَ اِلَّا اللّٰہُ مُحَمَّدٌ رَّسُوْلُ اللّٰہِ என்று கூறியுள்ளது. பின்னர் அதில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை.

(தஃப்ஸீரே கபீர் தொகுதி 3 பக்கம் 476 – 2010 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

......☆......☆......☆......

*(கடைசி பக்கத்தின் தொடர்ச்சி...)*

எண்ணிக்கையில் வருகை தந்துள்ள பாராளுமன்ற உறுப்பினர்களின் வருகை இதை வெளிப்படுத்துகின்றது. நான் மீண்டும் ஒரு முறை தங்களுடன் இருக்கின்றேன். தங்களின் சீடர்களுடன் இருக்கின்றேன். இது எனக்கு மற்றற்ற மகிழ்ச்சியை தருகின்றது. கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் மீண்டும் மீண்டும் இங்கு வருகை தர வேண்டும் என்று நாங்கள் ஆசைப்படுகின்றோம். தங்களின் ஒவ்வொரு வருகையின்போதும் மிகவும் மகிழ்ச்சியுடன் உங்களை வரவேற்போம்.

இதன் பிறகு Hon. Victor Dominello பாராளுமன்ற உறுப்பினர் சொற்பொழிவு ஆற்றினார். அதில் அன்னார் இவ்வாறு கூறினார்: அன்னார் தனது சொற்பொழிவில் NSW மாநிலத்தின் முதலமைச்சர் Hon. Barry O'Farrell அவர்களின் தூதுச் செய்தியை வாசித்துக் காட்டினார். முதலமைச்சர் அவர்கள் தமது தூதுச் செய்தியில் இவ்வாறு கூறியிருந்தார்கள்: கண்ணியத்திற்குரிய கலீஃபத்துல் மஸீஸ் அவர்கள் இந்த மாநிலத்திற்கு வருகை தந்தது மிகவும் மகிழ்ச்சியளிக்கின்றது. எங்களுக்கு இது ஒரு பெருமிதத்திற்கான சந்தர்ப்பம் ஆகும். சவுத் வேல்ஸ் நகரத்திற்கு மிகவும் கண்ணியத்திற்குரிய இடமாகும். கலீஃபத்துல் மஸீஹ் அவர்களைப் போன்ற மகத்துவமிக்க தலைவரை வரவேற்பதற்கு சந்தர்ப்பம் கிடைக்கின்றது. நான் தங்களின் இந்த உறுதிமிக்க எண்ணத்தை அறிகின்றேன். தாங்கள் உலகில் அமைதியை நிலைநாட்டுவதற்கு முயற்சி செய்கின்றீர்கள். அதேபோன்று மத நல்லிணக்கத்தை வளர்த்து வருகின்றீர்கள். என் புறமிருந்து நல் விருப்பங்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும் New South Wales சுற்றுப்பயணத்திற்கு எனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

(உருது பத்ர் பத்திரிகை 9 ஜனவரி 2014 தொடரும்....)

......☆......☆......☆......

*(மல்ஃபூஸாத்....முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)*

இறைவன் விரும்புகின்றான். இந்த விஷயத்தை நாம் மறந்து விடக்கூடாது. அதாவது அவன் நமக்கு எத்தனை மகத்துவமிக்க சிறப்புகளை வழங்க விரும்புகின்றானோ அதற்கேற்ப அவன் நமக்கு ஆற்றல்களையும் அருளியுள்ளான். ஏனென்றால் அதற்கேற்ப ஆற்றல்கள் வழங்கப்படவில்லையென்றால் பின்னர் எந்நிலையிலும் நம்மால் அந்த சிறப்புகளை பெற்றிருக்க முடியாது. இதனுடைய உதாரணம் இவ்வாறாகும். அதாவது ஒரு நபர் ஒரு கூட்டத்திற்கு விருந்து அளிக்கின்றார் என்றால் அவர் அந்த கூட்டத்திற்கேற்ப உணவை ஆயத்தம் செய்வதும், அதற்கேற்ப ஓர் இடம் இருப்பதும் அவசியமாகும்.

ஓராயிரம் நபர்களுக்கு அழைப்பு கொடுத்து விட்டு அவர்கள் அமர்வதற்கு ஒரு மிகச் சிறிய குடிசையை ஏற்பாடு செய்ய முடியாது. அது நடக்காது. இன்னும் கூறப்போனால், அந்த நபர் அந்த எண்ணிக்கையை முழுமையாக கருத்தில் கொள்வார்.

இதேபோன்று இறைவனின் வேதமும் ஒரு விருந்து மற்றும் விருந்து உபசரிப்பு ஆகும். அதற்காக முழு உலகமும் அழைக்கப்பட்டுள்ளது. அந்த விருந்திற்காக இறைவன் ஏற்பாடு செய்துள்ள வீடு என்பது மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள அந்த ஆற்றல்கள் ஆகும். ஆற்றலின்றி எந்த பணியும் நடைபெற முடியாது. காளை, நாய் அல்லது வேறொரு விலங்கிற்கு முன்னால் திருக்குர்ஆனின் போதனைகளை எடுத்து வைத்தால் அவற்றால் அதனை புரிந்து கொள்ள முடியாது. ஏனென்றால் திருக்குர்ஆனின் போதனைகளை உள்வாங்கக்கூடிய ஆற்றல்கள் அவைகளிடம் இல்லை. ஆனால் அல்லாஹ் நமக்கு அந்த ஆற்றல்களை வழங்கியுள்ளான். மேலும் நாம் அதிலிருந்து பயன்பெற முடியும்.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 310, 311 – 2018 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

EDITOR
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
SUB EDITOR
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 6 Thursday 22 July 2021 Issue No. 29

MANAGER
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.575/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

## ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்ய) அவர்களின் ஆஸ்திரேலியா சுற்றுப் பயணம் (செப்டம்பர் 2013)

### 2013 ஆம் ஆண்டு அருளுக்குரிய ஜுமுஆ நாள் அக்டோபர் 18 கிலாஃபத் ஜூப்ளி ஹால் திறப்பு விழா

நிகழ்ச்சி திருக்குர்ஆன் திலாவத்துடன் ஆரம்பமானது. மதிப்பிற்குரிய முஜீபுர் ரஹ்மான் சாஹிப் சனோரி திலாவத் செய்தார்கள். மேலும் அதன் ஆங்கில மொழியாக்கத்தையும் வாசித்தார்கள். அதன் பிறகு தேசிய வெளியுறவு செயலரான மதிப்பிற்குரிய மிர்ஸா ரம்ஸான் ஷரீஃப் சாஹிப் அவர்கள் விருந்தினர்களை வரவேற்றார்கள். மேலும் தனது அறிமுக உரையை ஆற்றினார்கள்.

**சில விருந்தினர்களின் சொற்பொழிவு**

Senator Concetta Fierravanti Wells அவர்கள் ஆஸ்திரேலிய பிரதமரான மதிப்பிற்குரிய டோனி எபேட் அவர்களின் பிரதிநிதியாக கலந்து கொண்டிருந்தார்கள். அன்னார் பாராளுமன்ற செயலராகவும் உள்ளார்கள். அன்னார் தனது சொற்பொழிவில் இவ்வாறு கூறினார்கள்: நான் கண்ணியத்திற்குரிய கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் ஆஸ்திரேலிய வருகையை மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றேன். கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் ஓர் ஆன்மீக தலைவராக ஆற்றுகின்ற தொண்டுகள் மிகவும் மதிக்கத்தக்கதாகும்.

எங்களது நாட்டின் வரலாற்றின் ஆரம்பத்தில் 19வது நூற்றாண்டில் முஸ்லிம்கள் ஆற்றிய அந்த மகத்துவமிக்க தொண்டுகளையும், முயற்சிகளையும் நான் ஆமோதிக்கிறேன். அவர்களில் ஹஸன் மூஸா சாஹிப் அவர்களைப் பற்றி நான் அறிவேன். அன்னார் 1842 ஆம ஆண்டு பிறந்தார்கள். ஆஸ்திரேலியாவின் முதல் அஹ்மதியாக இருந்தார்கள். Karrakatta பெர்த் என்ற இடத்திலுள்ள கபருஸ்தானில் அன்னார் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளார்கள்.

2012 ஆம் ஆண்டு Koblenz (ஜெர்மனியில்) மாண்புமிகு கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் வழங்கிய அறிக்கையின் மூலம் நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். அதில் அன்னார் இவ்வாறு கூறியிருந்தார்கள்: உண்மையான நன்றியுணர்வு என்பது கலப்பற்ற தன்மை மற்றும் உயர்ந்த நல்லொழுக்கம் ஆகியவற்றின் மூலமாக ஏற்படுகின்ற ஒரு தொடர்பாகும். ஒவ்வொரு குடிமகனும் அவன் எந்த நாட்டைச் சார்ந்தவனாக இருந்தாலும் சரி. அவர் தனது நாட்டுடன் உண்மையான நன்றியுணர்வுடன் கூடிய தொடர்பிலும், நம்பகத்தன்மையிலும் நிலைபெறுவது அவசியமாகும்.

அஹ்மதிய்யா ஜமாஅத் இந்த அனைத்து ஒன்றுபட்ட நல்லொழுக்கங்களையும் பேணுகின்றது. அது எமது ஆஸ்திரேலிய சமூகத்தை ஒன்றிணைக்கின்றது. என்னால் உங்களில் ஏராளமானவர்களின் தியாகங்களை புரிந்து கொள்ள முடியும். ஏனென்றால் நான் கூட ஹிஜ்ரத் செய்து இங்கு வந்த ஒரு பெற்றோரின் மகளாவேன். தங்களின் ஜமாஅத் மிகவும் மகிக்கத்தக்கதாகும். மேலும் ஆஸ்திரேலிய சமூகத்துடன் மிக ஆழமான தொடர்புடையதாகும்.

இதன் பிறகு ஃபெடரல் பாராளுமன்ற உறுப்பினராகிய Hon. ED Husic என்பவரும் கலந்து கொண்டிருந்தார். (அவர் எதிர்க்கட்சியின் பிரதிநிதியாக இருந்தார்). அன்னார் ஆஸ்திரேலிய பாராளுமன்றத்தின் முதல் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர் ஆவார். போஸ்னியாவிலிருந்து ஹிஜ்ரத் செய்து ஆஸ்திரேலியா வந்து குடியேறி இருந்தார். அன்னார் தனது சொற்பொழிவில் இவ்வாறு கூறினார். கண்ணியத்திற்குரிய கலீஃபத்துல் மஸீஹ் அவர்களே! இன்று தங்களுடன் நேரத்தை செலவிடுவதற்கு எனக்கு சந்தர்ப்பம் கிடைத்திருக்கின்றது. இது எனக்கு கிடைத்த மாபெரும் கவுரவமாகும். நான் தங்களை மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றேன். தங்களின் ஜமாஅத் தங்களின் வருகையின் காரணமாக மிகவும் மகிழ்ச்சியுடன் காணப்படுகின்றது என்பதை கூறுவதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் ஆஸ்திரேலிய வருகை என்பது ஆஸ்திரேலியாவிலுள்ள 110 ஆண்டு கால அஹ்மதிகளின் வரலாற்றில் அஹ்மதிய்யத்தின் ஆன்மீக தலைவரின் வருகை என்பது நான்காவது முறையாகும். தாங்கள் ஆஸ்திரேலியாவிலிருந்து செல்லும்போது உங்களின் ஜமாஅத்தின் மீது நீங்கள் பெருமிதம் கொள்வீர்கள் என்று நான் கூறிக் கொள்ள விரும்புகின்றேன். அஹ்மதிய்யா ஜமாஅத்தின் உறுப்பினர்கள் பல்வேறு துறைகளிலும், பணிகளிலும் இன்னும் எல்லா வகையிலும் முன்னுதாரணமான குடிமக்களாக இருக்கின்றார்கள்.

கண்ணியத்திற்குரிய கலீஃபத்துல் மஸீஹ் அவர்களே! இன்று தாங்கள் இங்கு வருகை தந்திருப்பது மிகவும் மகிழ்ச்சிக்குரியதாகும். ஏனென்றால் தாங்கள் தங்களுடன் ஓர் உத்வேகத்தையும், ஆற்றலையும் கொண்டு வந்துள்ளீர்கள். மேலும் சகிப்புத்தன்மையை வெளிப்படுத்துவதற்கான உறுதியை அது தருகின்றது. அந்த உறுதியின் மூலமாக தாங்கள் தங்களுடைய தூதுச் செய்தியை முழு உலகிற்கும் எட்ட வைக்க விரும்புகின்றீர்கள். இதன் காரணமாக இன்று தங்களின் ஆஸ்திரேலிய வருகை மிகவும் முக்கியத்துவத்தை கொண்டுள்ளது. தாங்கள் அமைதியை நிலைநாட்டுவதற்கும், மத நல்லிணக்கத்திற்கான தூதுச் செய்தியையும் பரப்பி வருகின்றீர்கள். அதற்காக ஐரோப்பிய பாராளுமன்றத்திலும், US காங்கிரஸ் மற்றும் ஏனைய தலைவர்களுடனும் தாங்கள் அமைதியை நிலைநாட்டுவதற்கான சொற்பொழிவுகளில் அமைதிக்கான தூதுச் செய்தியை வழங்கியுள்ளீர்கள். தங்களின் இந்த வருகை நினைவுகூறத்தக்கதாக இருக்கும். ஆண்டு ஆண்டு காலம் மிகவும் முக்கியத்துவத்துடன் பார்க்கப்பட்டுக் கொண்டிருக்கும். நிச்சயமாக இன்று தங்களுடன் நேரத்தை கழிப்பதில் மிகவும் கண்ணியத்தை உணர்கின்றேன். மேலும் தங்களை நான் மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றேன்.

இதன் பிறகு ஃபெடரல் பாராளுமன்ற உறுப்பினர் Hon. Philip Ruddock செற்பொழிவாற்றினார்கள். அன்னார் 17 முறை பாராளுமன்ற தேர்தலில் வெற்றி பெற்றுள்ளார்கள். தற்போது ஆஸ்திரேலியாவின் House of Representatives–ல் ஒரு நீண்ட காலமாக தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதியாக உள்ளார்கள். அன்னார் 40 ஆண்டுகளை விட கூடுதலாக பாராளுமன்ற உறுப்பினராக உள்ளார்கள். அன்னார் Father of Parliment என்று அழைக்கப்படுகின்றார்கள். ஆளும் கட்சியான லிபரல் பார்ட்டியின் மிகவும் செல்வாக்கு மிகுந்த அரசியல்வாதி ஆவார்கள். அன்னார் தனது சொற்பொழிவில் கூறினார்கள்:

மாண்புமிகு கலீஃபத்துல் மஸீஹ் அவர்களை நான் மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றேன். மீண்டும் ஒரு முறை அன்னார் வரவேற்பதில் நான் எனது கண்ணியமாக கருதுகின்றேன். 2006 ஆம் ஆண்டிலும் அன்னாரை நான் சந்தித்திருந்தேன். இது எனது மாபெரும் நற்பேறு ஆகும். நான் ஆஸ்திரேலியாவின் Imigiration அமைச்சராக ஏழறை ஆண்டு காலம் பணிபுரியும் வாய்ப்பு எனக்கு கிடைத்துள்ளது. இதுவும் எனக்கு கண்ணியமளிக்கும் விஷயமாகும். இந்த இடைப்பட்ட காலத்தில் பாகிஸ்தானிலிருந்து ஆயிரக்கணக்கான அஹ்மதிகளுக்கு மனித அனுதாபத்துடன் ஹிஜ்ரத் செய்வதற்கான சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. அவர்கள் மிகவும் அநீதிகளுக்கு இலக்காகி இருந்தார்கள். இந்த நிலை நமக்கு மிகவும் கவலையளிக்கக்கூடியதாகும். ஏனைய சில நாடுகளிலும் அஹ்மதிகளின் மீது அநீதிகள் இழைக்கப்படுகின்றது.

கண்ணியத்திற்குரிய கலீஃபத்துல் மஸீஹ் அவர்களே! நான் உங்களுக்கு நம்பிக்கை அளிக்கின்றேன். தங்களின் சீடர்கள் இந்த நாட்டில் எப்போதும் வரவேற்கப்படுவார்கள். அஹ்மதிகளை ஆஸ்திரேலிய கண்ணியத்துடன் பார்க்கின்றது. இதனை இத்தனை பெரிய

*(தொடர்ச்சி 11 வது பக்கம்...)*

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad